Registered as a News paper in Sri Lanka
விலை ரூபா: 10.00
# வலம்புரி
Valampurii
பக்கங்கள்:– எட்டு
சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2036 | கார்த்திகை 26 | ஞாயிற்றுக்கிழமை (11.12.2005) | தொலைபேசி 222 3378, 222 7644 | ஒலி 357

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
சீமெந்து

# சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்து மகிந்தவால் புதிய யோசனை தயாரிப்பு

## யப்பான் தூதுவர் யசூசி அகாஷி தெரிவிப்பு

(நமது நிருபர்)

அரசிற்கும் விடுதலைப்புலிகளிற்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் குறித்த புதிய யோசனை ஒன்றை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தயாரித்துள்ளார். அவரால் தயாரிக்கப்பட்ட இவ் யோசனைகள் விரைவில் விடுதலைப்புலிகளிடம் கையளிக்கப்படவுள்ளது. அதனை அவர்கள் ஏற்கும் பட்சத்தில் உடனடியாக இருதரப்பினருக்கும் இடையிலான நேரடிப்பேச்சுவார்த்தை இடம்பெறும் எனக்கூறப்பட்டுள்ளது. (08 ஆம் பக்கம் பார்க்க)



நேற்று யாழ்ப்பாணத்தில் பெய்த கடும் மழை காரணமாக வெள்ளக் காடாகக் காட்சி தரும் பொம்மைவெளிப்பகுதி.

## பனூஸ் சூறாவளியின் தாக்கத்தினால் நேற்று இடியுடன் கூடிய கடும் மழை

### ஆயிரம் குடும்பங்கள் இடம்பெயர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் நேற்று பெய்த கடும் மழை மற்றும் புயல் காரணமாக ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.இடம் பெயர்ந்துள்ள மக்கள் பாடசாலைகளில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ் தெரிவித்தார். யாழ். பொம்மை வெளி,நல்லூர் ,ஆனைக்கோட்டை,வேலணை ,சண்டிலிப்பாய் ,காரை நகர், பருத்தித்துறை ஆகிய பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக தாழ்ந்த நிலப்பகுதிகளில் உள்ள மக்களே இடம்பெயர்ந்துள்ளனர். அவர்களுக்கான உணவு வழங்கும் நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அரச அதிபர் நேற்றுத் தெரிவித்தார். கல்லுண்டாய் குடியேற்றத்திட்டத்திற்குள் கடல் நீர் உட்புகுந்ததால் 75 இற்றும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

கடலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படகுகள் வெள்ளத்தால் (08 ஆம் பக்கம் பார்க்க)

## எம் மீது யுத்தம் திணிக்கப்பட்டால் அதனை நாம் எதிர்கொள்ளத்தயார்

### தமிழ்ச்செல்வன் ரொய்ட்டருக்குத் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

யுத்தமொன்றினை விடுதலைப்புலிகளும் தமிழ் மக்களும் விரும்பவில்லை. எனினும் அது எம்மீது திணிக்கப்பட்டால் அதனை எதிர்கொள்ள நாம் தயாராக இருக்கின்றோம் என விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

மீண்டும் யுத்தமொன்றிற்குச் செல்வதில் இருந்து தவிர்த்துக்கொள்வதற்கான இறுதிச் சந்தர்ப்பத்தை அரசாங்கம் எதிர்நோக்கியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

ரொய்ட்டர் செய்திச் சேவைக்கு வழங்கிய செவ்வியிலேயே (08ஆம் பக்கம் பார்கக)

## மட்டக்களப்பு கிரானில் கடத்தப்பட்ட குடும்பஸ்தர் இருவர் சுட்டுக்கொலை

(கொழும்பு)

மட்டக்களப்பு நகருக்கு வெளி யே கிரான் பகுதியில் இளம் குடும்பஸ் தர் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாதோரினால் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்ட இவர்கள் நேற்று சூட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இளம் குடும்பஸ்தர்களான சந்திரசேகரன் ஜீவானந்தன் (வயது-28)கறுத்தப்பிள்ளை சசிக்குமார் (வயது31) ஆகியோர் சடலமாக மீட்கப்பட்டவராவர்.

இருவரது சடலங்களும் நேற்றுக் காலை வீதியில் வெவ்வேறு இடங்களில் கண்டெடுக்கப்பட்டதாகவும் ஒருவரது சடலம் கைகள், கண்கள் மற்றும் கால்கள் கட்டப்பட்டிருந்ததாகவும் வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.இது தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ச–4)

## திருமலை ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் நேற்றுக்காலை குண்டு வெடிப்பு

திருகோணமலை உட்துறை முக வீதியில் உள்ள ஈ.பி.டி.பி.அலுவலகத்தில் நேற்றுக் காலை 11.30மணியளவில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் நால்வர் காயம் அடைந்தனர். காயமடைந்த அவர்கள் திருகோணமலை அரசினர் மருத்துவமனை யில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



இச்சம்பவத்தில் ஈ.பி.டி.பி.திருகோணமலை மாவட்ட பொறுப்பாளர் ஞானப்பிரகாசம் பலத்த காயங்களுக்குள்ளாகி திருகோணமலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்கென கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.இச் சம்பவம் தொடர்பாக திருகோணமலை பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சம்பவ இடத்தைச் சுற்றிலும் பொலிஸாரும் இராணுவத்தினரும் குவிக்கப்பட்டுள்ளனர். (ச–4)

## ஜே.வி.பி-ஹெல உறுமய பிரதிநிதிகளுடன் தமிழ்ச்செல்வன் நேரடிப்பேச்சுவார்த்தை

### இம்மாத இறுதியில் நடக்கும் என்கிறது சிங்கள ஊடகம்

(கொழும்பு)



வடக்கு கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைப் பெற்றுக் கொள்வதற்காகவும் சமாதான நடவடிக்கைகளை முன் கொண்டு செல்வதற்காகவும் ஜே.வி.பி.மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகளுடன் பகிரங்கப் பேச்சுவார்த்தையை மேற்கொள்ள விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் இணங்கியிருப்பதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கிளிநொச்சிய சமாதான செயலகத்திற்குச் சென்ற சர்வமத சமாதான நிதியத்தின் பிரதிநிதிகளைச் சந்தித்தபோது விடுதலைப்புலிகளின் ஊடகப்பேச்சாளர் தயா மாஸ்டர் இதனை அறிவித் (08 ஆம் பக்கம் பார்க்க)


உங்கள் காரியாலயத்தில், உங்கள் வீட்டில், நீங்கள் விரும்பிய இடத்தில்
★ உலக சுகாதார விதிமுறைகளுக்கமைவான தயாரிப்பு முறை
★ அதிநவீன தயாரிப்பு சாதனங்கள் மூலமான இரட்டிப்பு சுத்திகரிப்பு
★ இலங்கை தரநிர்ணய உத்தரவாதம் SLS
★ உங்கள் வாசல் வரையான இலவச சேவை
மேலதிக விபரங்களுக்கு
SWISS MINERAL
20 லீட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் 210/= மட்டுமே
Head Office
Gbn,posfach
8026 Zurich
Switzerland
Tel+412438259
Factory;
231, Temple Road,
Nallur, Jaffna.
Phone : 222 8122
0773126963


நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நேற்றுத்தாக்கிய பனூஸ் சூறாவளியால் வெள்ளத்தில் மிதக்கும் யாழ்ப்பாணம்







## வாக்கெடுப்பில் பங்கேற்காத அமைச்சர்கள் சுயவிருப்பில் விலகியதாகக் கருதப்படுவர்

### ஜனாதிபதி மஹிந்த எச்சரிக்கை

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் வாக்கெடுப்புகள் நடைபெறும் போது பாராளுமன்றில் இல்லாத அமைச்சர்கள் தங்களின் சுயவிருப்பின் பேரில் அமைச்சுப் பதவியைத் துறந்ததாகக் கருதப்படுவார்கள் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எச்சரித்துள்ளார்.

ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே மஹிந்த ராஜபக்ஷ இதனைத தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் நடைபெறும் விவாதங்களில் கலந்துகொள்வதுடன் வாக்கெடுப்பு நடத்தப்படும் போது அங்கு இருக்க வேண்டும் என்று தெரிவித்த மஹிந்த ராஜபக்ஷ பாராளுமன்ற ஒழுங்குகளைக் காக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளார். (ற-4)

## வன்னிக்கு நோர்வே அரசு ரூ.3 மில்லியன் நிதியுதவி

(கொழும்பு)

அண்மைய மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட வன்னி மக்களின் நல்வாழ்விற்காக மூன்று மில்லியன் ரூபாய்களை வழங்க நோர்வே அரசு முடிவு செய்துள்ளதாக நோர்வே தூதரகம வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உதவிகள் நோர்வேயின அரச சார்பற்ற நிறுவனமான போரூட் ஊடாக வழங்கப்படும் எனவும் அச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது கிளிநொச்சி மற்றும முல்லைத்தீவு மாவட்டங்களிற்கான பயணத்தை மேற்கொண்டுள்ள நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கர் நேரில் வெள்ளப் பாதிப்புக்களை பார்வையிட்டதன் பின்பே இவ் உதவிகள் அறிவிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

## உள்ளூராட்சி எழுதுநர் சங்கத்தின் கூட்டமும் நிர்வாக சபை தெரிவும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு உள்ளூராட்சி எழுதுநர் சங்கத்தின் 4ஆவது பொதுச்சபைக் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு சங்கத் தலைவர் ம.பரமேஸ்வரன் தலைமையில் யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

ஆரம்ப நிகழ்வுகள் மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து நாவலர் பெருமானுக்கு மலர்மாலை அணிவித்து வணக்கம் செலுத்தப்பட்டு இரண்டு நிமிட மௌன வணக்கத்துடன் பொதுக் கூட்டம் ஆரம்பமாகியது.

தலைவர் தனது உரையில், எதிர்காலத்தில் வலுவான ஒரு தொழிற்சங்கமாக இயங்குவதற்கு சகலரும் இச் சங்கத்தில் உறுப்பினர்களாக சேர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டுமெனவும் இதற்கு சகல உறுப்பினர்களும் பாடுபடவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

கடந்த காலங்களில் சங்க உறுப்பினர்களாகவிருந்து தொழிற் சங்கத்திற்காக உழைத்த உறுப்பினர்கள் மலர்மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டனர்.

வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சி எழுதுநர் சங்கத்தின் பெயரினை வடக்கு-கிழக்கு மாகாண முகாமை உதவியாளர் சங்கமென மாற்றுவதெனவும் பொதுச்சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

புதிய நிர்வாக சபையில் தலைவராக ச.பரமேஸ்வரன், உபதலைவராக கே.சிவராஜலிங்கம், இ.தங்கராசா பொதுச்செயலாளராக செ. சந்திரசேகரம், உபசெயலாளராக க.குருநாதன், பொருளாளராக க.ஜெயானந்தன், உபசெயலாளராக கா.சண்முகதாசன் ஆகியோரும் ஒன்பது நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (ற-47)

## அழகப்பெருமாவுக்கு பா.உறுப்பினர் பதவி

(கொழும்பு)

மாத்தளை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அழகப்பெருமா விரைவில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்படவுள்ளதாகத் தெரிகிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் வெற்றியின் முக்கிய பங்காற்றிய இவருக்கு ஏற்கனவே இந்த நியமனம் வழங்கப்படவிருந்த போதிலும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கொண்ட நடவடிக்கைகளால் தாமதம் ஏற்பட்டது.

இதேவேளை, தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்படவிருக்கும் அழகப்பெருமா பாதுகாப்பு பிரதி அமைச்சராக பதவியேற்க உள்ளதாக குறிப்பிடத் தக்கது.

## திறமையான ரயில்சேவைக்கு ஆலோசனை

(கொழும்பு)

திறமையான ரயில் சேவையை நடத்துவதற்கு குறைந்தது 153 ரயில் என்ஜின்கள் மற்றும் பவ செற்றுக்கள் தேவைப்படுவதாக ரயில்வே திணைக்களம் அரசாங்கத்திடம் தெரிவித்துள்ளது.

தற்போது சுமார் 131என்ஜின்களும், பவசெற்றுக்களுமே உள்ளன. அவற்றில் 75 சதவீதமானவை 15 வருடங்களுக்கு மேல் பழமையானவை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தரம் குறைந்த ரயில்ப் பாதைகள் அமைப்புக் காரணமாக ரயில்கள் குறைந்த வேகத்தில் ஓட்ட வேண்டியிருப்பதாக திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (து-9)

## தேசியப் பாடசாலைகளுக்கு 2230 ஆசிரியர்கள் நியமனம்

(கொழும்பு)

கல்வியமைச்சின் கீழ் இயங்கும் தேசியப் பாடசாலைகளுக்கு அடுத்த ஆண்டு 2ஆயிரத்து 230 ஆசிரியர்கள் புதிதாக நியமிக்கப்படவுள்ளதாக கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் எச்.எல். குணவர்த்தன தெரிவித்தார்.

வேலையற்ற பட்டதாரிகளுக்கான அரசதுறைகளில் நிரந்தர நியமனங்களை வழங்கும் திட்டத்தின் கீழ் இந்த ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

நாடளாவிய ரீதியில் தற்போது இயங்கி வரும் 324 தேசிய பாடசாலைகளிலும் 2ஆயிரத்து 238 ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவுகின்றது.

இந்த வெற்றிடங்களை முழுமையாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதைத் தொடர்ந்து மாகாண கல்வியமைச்சின் கீழ் இயங்கி வரும் பாடசாலைகளுக்கும் பட்டதாரி ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாக கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் தெரிவித்துள்ளார்.

42ஆயிரம் பட்டதாரிகளுக்கு அரச துறைகளில் நிரந்தர நியமனங்களை வழங்கும் திட்டம் இந்த ஆண்டு இரண்டு கட்டங்களில் மேற்கொள்ளப்படவுள்ளது. (து-9)

## இராசி பலன்

11. 12. 2005

(கார்த்திகை26, ஞாயிற்றுக்கிழமை)

ஏகாதசி முன்னிரவு 11. 48 மணிவரை

ரேவதி முற்பகல் 10. 23 மணி வரை

இராகுகாலம்4. 49-6. 19 மணிவரை

சுபநேரம்9. 19-10. 49 மணிவரை

ஏகாதசி விரதம்

| | |
|---|---|
| மேடம் | தொழில் ஆர்வம், காரிய அனுகூலம், நல்ல செய்தி, நண்பர்கள் சந்திப்பு. |
| இடபம் | சுபசெலவு, ஆரோக்கிய குறைவு, எடுத்த காரியம் தாமதம், பிரயாணம். |
| மிதுனம் | செய்தொழில் விருத்தி, புதிய பொருள் சேர்க்கை, சுபசெலவு, கீர்த்தி. |
| கடகம் | உற்சாகம், காரிய அனுகூலம், செல்வாக்கு, நண்பர்கள் உதவி. |
| சிங்கம் | பிரயாணம், புதிய திட்டமிடல், சரீரப்பிரயாசை, அமைதிக்குறைவு. |
| கன்னி | காரிய தடங்கல், ஆரோக்கிய குறைவு, போசன சுகம், மனக்கவலை. |
| துலாம் | நல்ல சம்பவம், காரிய நன்மை, விருந்துபசாரம், உறவினர் சந்திப்பு. |
| விருச்சிகம் | பிரயாண சுகம், நல்ல வரவேற்பு, உடல் நலம், காரிய சித்தி. |
| தனுசு | முயற்சி தாமதம், உறவினர் மனஸ்தாபம், வியாபார விருத்தி, போசன சுகக்குறைவு. |
| மகரம் | முயற்சி தாமதம், தொழில் ஆர்வம், புதிய செய்தி, சயன சுகக்குறைவு. |
| கும்பம் | கூட்டு முயற்சி, பிரயாண நன்மை, செய்தொழில் விருத்தி, செல்வாக்கு. |
| மீனம் | வீண்வார்த்தை, புதிய திருப்பம், அதிக செலவு, தொழில் மந்த நிலை. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.
- வளவன்

## சொத்துக்கடன் தாபன விதிக்கோவை அத்தியாயத்தில் மேலும் சில திருத்தங்கள்

(சாவகச்சேரி)

சொத்துக்கடன் தொடர்பாக தாபன விதிக்கோவை அத்தியாயத்தில் மேலும் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கமைய ஏற்கனவே விண்ணப்பித்தோரும் புதிதாக விண்ணப்பிப்போரும், விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டிய ஆவன வபரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய அடையாள அட்டையின் உறுதிப்படுத்தப்பட்ட இரு புகைப்படப பிரதிகள், இறுதியாகப் பெற்ற சம்பளக் கூற்றின் இரு பிரதிகள், அங்கீகரிக்கப்பட்ட அளவை வரை பட மூலப்பிரதி, உரித்து உறுதிகளின் மூலப் பிரதிகளுடன் பெறும்போது வங்கியில் சமர்ப்பித்தல் வேண்டும். 30வருடங்களுக்கான பதிவுகள் (காணப் பதிவாளரிடம் பெறப்பட்ட இருமடித்தாள்கள்), உரித்து அறிக்கை என்பவற்றோடு சொத்துடமைச் சான்றிதழ், உடைமையாக்கப்படாமைக்கான சான்றிதழ், தெருவெல்லை கட்டடச சான்றிதழ், மதிப்பீட்டு அறிவித்தல்-கடந்த காலாண்டுக்கான வீத வரி, பறறுச்சீட்டுக்கள்,அணுகல் வழியினை காண்பிக்கும் வரைபடம் கொள்வனவாயின் விற்பனையாளரிடம் பெறப்பட்ட கடிதத்தோடு ஆள அடையாளத்தினை உறுதிப்படுத்தும் வகையில் அமைந்த கடிதப் பிரதிகள் ஆகிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-21)

## உள்ளூராட்சி வார இறுதிப் பெருவிழா

(சாவகச்சேரி)

வலிகாமம் தென் மேற்குப் பிரதேச சபையின் உளளூராட்சி வார இறுதிப் பெருவிழா எதிர்வரும் 14ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்கு பிரதேச சபையின் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையாவும், சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம், பதில் நீதவான இ.வசந்தசேனன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் எந்திரி நவரத்தினராசா, சண்டிலிப்பாய் உதவிப் பிரதேச செயலர் எ.அன்ரன் யோகநாயகம், பி.உ. உப அலுவலக சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் வி.கந்தசாமி,ஆய்வு உத்தியோகத்தர் வ.பரமேஸ்வரன், மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத் தலைவர் க.முதலியார் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நிகழ்வில் 15 வருடங்களிற்கு மேல் சேவையாற்றியவர்களுக்கு விருது வழங்கல், உளளூராட்சி சபை அலுவலர்களிடையான சதுரங்கப் போட்டியில் வெற்றியீட்டியோர்களான விருது வழங்கல் உட்பட பல கலை நிகழ்வுகளும் இடம்பெற்றுள்ளன. (ற-21)

## இடைத்தங்கல் முகாம்கள் அமைக்கப்படாததால் மாமுனைப் பகுதி சுனாமி அகதிகள் அவலம்

(திருநெல்வேலி)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான இடைத்தங்கல் முகாம்கள் கூட இதுவரை வடமராட்சி கிழக்கு மாமுனைப் பகுதியில் 20 குடும்பங்களிற்கு அமைத்து கொடுக்கப்படவில்லை.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களிற்கான இந்த இடைத்தங்கல முகாம்களை அமைத்துத்தருவதாக 'சேவாலங்கா' நிறுவனம் வாக்குறுதி அளித்திருந்த போதிலும், இதுவரை இவர்களிற்கான இடைத்தங்கல் முகாம்களை அமைப்பதற்கு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இவ் வாறு இடைத்தங்கல் முகாம்கள் கிடைக்காத குடும்பங்கள் தாங்களாகவே முகாம்களை நிறுவத் தயாராக இருப்பதாகவும இதற்குரிய கொடுப்பனவை வழங்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை, அவுஸ்திரேலிய செஞ்சிலுவைச் சங்கம் மாமுனைப் பகுதி மக்களிற்கான நிரந்தர வீடுகளைக் கட்டிக் கொடுக்க முனவந்துள்ள போதும் அதன் பணிகள மந்த கதியிலேயே முன்னெடுக்கப்படுவதால் மக்கள் விசனமடைந்துளளனர். (து-43)

## இடமாற்றம் பெறும் சாவகச்சேரி நகரசபை ஊழியர்கள்

(சாவகச்சேரி)

உள்ளூராட்சி மன்றங்களிடையான வருடாந்த இடமாற்றத்திற்கமைய சாவகச்சேரி நகரசபையில் கடமையாற்றும் கீழ்வரும் உததியோகத்தர்கள் யாழ். மாநகர சபைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

கணேசலிங்கம் கலாவதி (முகாமைத்துவ உதவியாளர் தரம்I), பொன்னம்பலம் ரவீந்திரன் (நூலகர் தரம III),வசந்தா மகாலிங்கம் (உள்ளூராட்சி உதவியாளர்) ஆகியோர் சாவகச்சேரி பிரதேச சபைக்கும், நாகலிங்கம் தங்கவேல் (முகாமைத்துவ உதவியாளர் தரம் III) கரைத்துறைப்பறறு பிரதேச சபை முல்லைத்தவுக்கும்,

வேலாயுதர் வித்தியானந்தன் (நூலகர் தரம்II) இடமாற்றம் தொடர்பான மேன்முறை யடுகள் இம் மாதம் 15ஆம் திகதிக்கு முன்பாக உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பிவைத்தல் வேண் டும் எனவும் ஜனவரி 1ஆம் திகதி முதல் இடமாற்றங்கள் அமுல்படுததப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (து-21)

## இன்று ஒரு தகவல்

# பக்தியின் எல்லை

"உனக்காக நான் எதுவேண்டுமானாலும் செய்யத் தயாராக இருக்கிறேன்"என்றார் ஒருவர் ."சரி !வேறு ஒன்றும்வேண்டாம் ஒரு பத்துரூபா இருந்தால் கைமாற்றாகக் கொடுங்கள். நாளைக்குத் தருகிறேன்"என்றார் இன்னொருவர். அவ்வளவு தான்."நான் அவசரமாக ஒருவரைப் பார்க்க வேண்டியிருக் கிறது.பிறகு வந்து உன்னைப் பார்க்கிறேன்" என்று சொல்லி வட்டு அந்த ஆள் நழுவிவிட்டார். இதுதான் இன்றைய உலக நிலவரம்.

ஆனால் ஒருவர் மீது உண்மையாகவே அன்பு செலுத் துவதென்பது பெரியவிடயம். பக்தி செலுத்துவதென்பது அதை விடப் பெரிய விடயம். பக்தி என்றால் ஏதோ கோயிலுக்குப் போய் சாமி கும்பிட்டு விட்டு வருவதல்ல. பக்தியின் எல்லை. எதுவென்று தெரிந்துகொள்ள உங்களுக்கு ஆசையா? அப்படியென்றால் இந்தக் கதையைக் கேளுங்கள்.

மயூர சர்மன் என்று ஒருவன் இருந்தான். கிருஷ்ணர் மீது அவன் பக்தியாக இருந்தான். ஒருநாள் கிருஷ்ணர் அவனைப் பார்த் துவிட்டுப் போகலாம் என்று நினைத்து வந்தார். கிருஷ்ணரைப் பார்த்தவுடன் அவனுக்கு மிக்க மகிழ்ச்சி இருக்காதா என்ன? வழக்கமாக பக்தர்கள் தானே பகவானிடம் ஏதாவது கேட்பார் கள். இங்கே பகவான் பக்தனைப் பார்த்துக் கேட்டார். "இதோ பாரப்பா! உன்னிடம் நான் ஒன்றுகேட்பேன் கொடுப்பாயா?" என்றார். பக்தன் மாட்டேன் என்றா சொல்வான்?

"நீங்கள் என்ன கேட்டாலும் அதைக் கொடுப்பதற்கு நான் சித்தமாயிருக்கிறேன்" என்றான் மயூர சர்மன். "உனது மகன் ஒருவன் ஐந்து வயதுடையவன் இருக்கிறானே. அவன் தான் எனக்கு வேண்டும்" என்றார், இவன் கொஞ்சம் கூடத் தயங்க வில்லை.'சரி! தந்தேன்'என்றான் கிருஷ்ணர் பார்த்தார். "அவ னது உடல் முழுவதும் எனக்குத் தேவையில்லை. அவனது உடலின் வலது பாகம் மட்டும் போதும்" என்றார். "அதற்கும் 'சரி! அப்படியே கொடுக்கிறேன்" என்றான்.

"அந்தச் சிறுவனை நிற்க வைத்து,அவனது தலையிலி ருந்து ஒரு ரம்பத்தால் அறுக்கவேண்டும்.அப்போதுதான் இரண்டு பக்கமாக அறுக்கவேண்டும்" என்றார்."சரி.அப்படியே செய்ய லாம்" என்றான். "அந்த ரம்பத்தை நீ ஒருபுறமும், உன் மனைவி ஒரு புறமும் பிடித்துக் கொண்டு அறுத்து அவனை இரண்டு துண்டாக்கவேண்டும்" என்றார். அதற்கும் 'சரி' என்றான்.

"அப்படிச் செய்யும்போது நீயும் அழக்கூடாது. உன் மனை வியும் அழக்கூடாது" என்றார்.அதற்கும் ஒத்துக்கொண்டான். "இவ்வளவு நிபந்தனைகளின் பேரில் தான் உன்மகனது வலது பாகத்தை நான் ஏற்றுக்கொள்வேன்.இல்லாவிட்டால் ஏற்றுக் கொள்ள மாட்டேன்"என்று சொல்லிவிட்டார் அவர்.

"உங்களுடைய அத்தனை நிபந்தனைகளுக்கும் கட்டுப் பட்டு நாங்கள் நடக்கின்றோம்" என்று சொல்லிவிட்டான் மயூர சர்மன்.

உடனே மகனைக் கூப்பிட்டார்.அவன் வந்து நின்றான். அவ னைக் குளிப்பாட்டினான். புதிய ஆடைகள் உடுத்திவிட்டான். அதன்பின்பு ஒரு ரம்பத்தை எடுத்து அறுக்க ஆரம்பித்தான். ஒரு பக்கம் அவன் மறுபக்கம் அவனது மனைவி. நடுவில் "அந்தப் பையன் அவர்களிருவரின் கண்ணிலும் கொஞ்சம் கூடக் கண் ணீர் வரவே இல்லை. ஆனால் அந்தச் சிறுவனின் இடது கண் ணிலிருந்து மட்டும் கண்ணீர் வழிய ஆரம்பித்தது.

இதைக் கிருஷ்ணர் பார்த்துவிட்டார். "எனது நிபந்தனைப் படி நீங்கள் நடந்து கொள்ளவில்லை. அதனால் உங்கள் மக னின் வலது பாகம் எனக்குவேண்டும் என்று விட்டார்" நாங்கள் இரண்டுபேரும் அழவில்லையே என்றான் மயூரசர்மன். "நீங் கள் அழவில்லை சரி! ஆனால் உங்கள் மகனின் இடது கண் மட்டும் அழுகிறதே?" என்றார் உடனே அந்தச் சிறுவன் என்ன சொன்னான் தெரியுமா? "என் உடலின் வலது பாகத்தை மட் டும் தானே பகவான் கேட்டார். வலதுபாகம் செய்த புண்ணி யத்தை இடது பாகம் செய்யவில்லையே என்று நினைத்துதான் இடதுபாகம் அழுதுகொண்டிருக்கிறது"என்றான்.

உடனே கிருஷ்ணரின் கண்களில் கண்ணீர் வர ஆரம்பித்து விட்டது. அந்தச் சிறுவனைக் கட்டிப் பிடித்துக் கொண்டார். அவன் பழைய மாதிரி முழுதாகிவிட்டான் இதுதான் பக்தியின் எல்லை என்று விளக்கம் கொடுத்தார். ஒரு ஆன்மிகப் பேச்சாளர். பக்தியின் எல்லையைப் புரிந்துகொள்வதற்காக இந்தக் கதை. நீங்கள் உடனே "பகவான் இப்படியெல்லாம் மகனை வெட் டிக்கொடு" என்று கேட்பாரா என்று கற்பனை செய்துகொண்டிருக் காதீர்கள்.

ஆன்மிக விடயங்களை ஆன்மிக நோக்கத்தில் புரிந்து கொள்ள வேண்டும். அதுதான் முக்கியம். பக்தியின் எல்லைக்கே நம்மால் போக முடியாவிட்டாலும் ஒரு ஓரத்திற்காவது போய்ச் சேர முடியுமா என்று முயற்சித்துப் பார்க்கலாமே! அதற்காகத் தான் இவ்வளவும்.இப்போது நமது ஆட்களின் பக்தி எந்த அள வில் இருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள ஒரு கதை சொல் கிறேன்.

ஒருவர் கடவுளிடம் வேண்டிக் கொண்டார்."நான் செய்யும் வியாபாரத்தில் இன்று 1000ரூபா இலாபம் கிடைத்தால் அதில் 500ரூபாவை உன் கோயிலுக்கு வந்து உண்டியலில் போடு கிறேன்"என்று வேண்டிக் கொண்டார்.வியாபாரம் செய்தார். 1000ரூபா கிடைக்கவில்லை 500ரூபா இலாபம் கிடைத்தது. அவர் அதன் பின் கோயிலுக்குப் போகவில்லை.

"கிடைத்த 500இல் பாதியை உண்டியலில் போட்டுவிட வேண்டி யது தானே" என்றேன். அவர் என்னை முறைத்துப் பார்த்தார். "விபரம் தெரியாமல் பேசாதீர்கள். கடவுள் ஏற்கனவே அவ ருடைய பங்கான 500ரூபாவை எடுத்துக்கொண்டு மீதி 500ஐ எனக்குக் கிடைப்பது போல் செய்திருக்கிறார். அதனால் இது எனக்குச் சேரவேண்டிய பங்கு" என்றார்.

இவரது பக்தியின் எல்லை எந்த அளவில் இருக்கிறது பார்த் தீர்களா?

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# மஹிந்தவின் நோர்வேக்கான அழைப்பு வரவேற்கத்தக்கது- ரவூப் ஹக்கீம்

(கொழும்பு)

இலங்கையின் சமாதான முயற்சிகளில் நோர்வே அனுசரணையாளர்களின் பங்களிப்பை தொடரு மாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கோரியுள் ளமை வரவேற்கத்தக்கது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள் ளார்.

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான சமாதான முன்னெடுப் பதற்காக நோர்வே அனுசரணை யாளர்கள் தங்களால் இயன்ற அதி கூடிய முயற்சிகளை செய்திருக் கின்றார்கள்.



இம் முயற்சிகளில் சிலவற்றில் நாம் அதிருப்தி கொண்டாலும் நோர்வே ஏற்பாட்டாளர்களைத் தவிர இன்னுமொரு ஏற் பாட்டாளர்களைத் தேடுவது அல்லது நியமிப்பது இக்கால சூழ லில் ஏற்புடையதல்ல என்று கருதுகின்றேன்.

சமாதான முயற்சிகளில் நோர்வே அனுசரணை யாளர்கள் ஆற்றிய பங்கு அளப்பெரியது. அவர் கள் இனப்பிரச்சினை தொடர்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கொண்டுள்ள நிலைப்பாடு தொடர்பாக நன்கு அறிந்து வைத்துள்ளனர். எவ்வாறாயினும் நாம் இந்த முடிவை வரவேற்கின்றோம் என்றும் ஹக்கீம் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

## ஓய்வூதியத் திகதிகள்

(ஊர்காவற்றுறை)

ஓய்வூதிய திணைக்களத்தால் சகல பிரதேச செயலர்களுக்கும் உதவி அரசாங்க அதிபர்களுக் கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ள 2006ஆம் ஆண் டுக்கான ஓய்வூதியத்திகதிகள் வருமாறு:

ஜனவரி 10,பெப்ரவரி 9, மார்ச் 9, ஏப்ரல் 6, மே10, யூன்,8, யூலை11, ஓகஸ்ட்10, செப்டெம்பர் 12, ஒக் டோபர் 4, நவம்பர் 9, டிசம்பர் 7. (ற-72)

## பலப்படுத்தப்படும் காவலரண்கள்

(பொன்னாலை)

குருநகர் கடற்கரை வீதியில் குருநகர் மகப் பேற்று பணிமனையின் எதிராக அமைந்திருக்கும் இராணுவக் காவலரண் புதிய மண் மூட்டைகள்- புதிய முட்கம்பிகள் கொண்டு இராணுவத்தினரால் பலப்படுத்தப்படுகின்றது.

மேற்படி காவலரணில் இருந்து வரும் இராணு வத்தினர் காவலரணின் தெற்குப் பக்கதில் முதற்தடவை யாக மிகவும் உயரமான கண்காணிப்பு அரண் ஒன்றை புதிதாக நிறுவி வருகின்றனர்.

இதேவேளை, யாழ்.குடாநாட்டிலுள்ள ஏனைய இடங்களில் இருக்கும் காவலரண்களும் புதிதாக மண்மூடைகள், பனை மரங்கள் போட்டு பலப்படுத் தப்பட்டு வருவதோடு,முட்கம்பிகளும் கொண்டு புதிய சுற்று வேலிகளும் அமைக்கப்பட்டு வருகின்றது. (49)

## ஓட்டோ-மோ. சைக்கிள் விபத்து

(நீர்வேலி)

பருத்தித்துறை வீதி நீர்வேலி சந்திக்கருகில் கடந்த வியாழக்கிழமை இரவு 7 மணியளவில் இடம்பெற்ற ஓட்டோ-மோட்டார் சைக்கில் விபத் தில் இருவர் காயமடைந்துள்ளனர்.

இச்சம்பவத்தில் மோட்டார் சைக்கிலில் வந்த குணம் என்பவர் தலையில் பலத்தா காயத்துக் குள்ளானார். அவருக்குப் பின்னால் இருந்து வந்த பெண்ணும் காயமடைந்துள்ளார்.

இதேவேளை, விபத்தில் சம்பந்தப்பட்ட ஓட்டோ அருகில் இருந்த பற்றைக்குள்விழுந்தது.ஓட்டோ சாரதி ஓட்டோவைக் கைவிட்டுவிட்டுத் தலைமறைவாகியுள்ளார். (4)

## பயிற்சிப்பட்டறை

(சாவகச்சேரி)

திணைக்களத் தலைவர் பதவி நிலை உத்தி யோகத்தர்களுக்கு கடந்த மாதம் 24,25ஆம் திகதிகளல் நடாத்தப்படவிருந்து பிற்போடப்பட்ட ஆளுமை அபிவிருத்தி ஒருநாள் பயிற்சிப் பட்டறை இம்மாதம் 12,13ஆம் திகதிகளில் நடாத்தப்பட வுள்ளது.

24ஆம் திகதிக்குரியவர்களுக்கு 12ஆம் திகதி யும் 25ஆம் திகதிக்குரியவர்களுக்கு 13ஆம திகதி யும மேற்படி பயிற்சிப்பட்டறை நடாத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (21)

## தொண்டமானுக்கு பாதுகாப்பு குறைப்பு; 3 அரசியல் கட்சிகள் கண்டனம்

(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலை வர் ஆறுமுகம் தொண்டமானின் பாதுகாப்பை அர சாங்கம் குறைத்துளள நடவடிக்கைக்கு ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவை கண்ட னம் தெரிவித்துள்ளன.

இக் கட்சிகளின் தலைவர்களான ரணில் விக் கிரமசிங்க இரா.சம்பந்தன், ரவூப் ஹக்கீம் ஆகி யோர் கையெழுத்திட்ட கடிதம் ஒன்று இது தொடர் பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

தொண்டமானுக்கு முன்னர் வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பைத் தொடர்ந்து வழங்க வேண்டும் என றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்களது பாதுகாப்பு அதிகரிக்கப் படவேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் மூன்று தலைவர்களும் தெரிவித்துள்ளனர். (ற)

# கண்காணிப்புக்குழுவின் செயற்பாடுகளை மீளாய்வு செய்ய அகாசியிடம் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு வினரது செயற்பாடுகளையும் மீளாய்வு செய்ய வேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் வலியுறுத்தியுள்ளார்.

இலஙகை வருகை தந்துள்ள ஜப்பானிய சிறப்பு தூதுவர் யசூசி அகாசியியை நேற்று முன்தினம் சந்தித்த ஹக்கீம் இதை வலியுறுத்தினார்.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் மீளாய்வு செய்யப் பட வேண்டிய அதே நேரத்தில் கண்காணிப்புக் குழு வினரது செயற்பாடுகளில் முறைபாடுகள் இருப்ப தால் அதனையும் மீளாய்வு செய்ய வேண்டும் என்று அகாசியிடம் ஹக்கீம் கூறினார்.

இந்தியாவின் முயற்சியால் இலங்கை அர சாங்கம் நோர்வே அரசாங்கத்தை மீண்டும் அழைத் துள்ளமை பாராட்டுக்குரியது என்றும் ஹக்கீம் தெரிவித் துள்ளார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பான அனைத்து நிலைப்பேச்சுக்களிலும் முஸ்லிம்களை தனித்தரப்பாக அங்கீகரித்து பேச்சுக்களில் பங் கேற்க அழைக்க வேண்டும் என்றும் அகாசியி டம் ஹக்கீம் வலியுறுத்தினார். (ற)

## அச்சுறுத்தல்களை எதிர் கொள்ளத் தயார் சிறிலங்கா தளபதிகள் கூட்டாக அறிவிப்பு!

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் எதுவித அச் சுறுத்தலையும் ஸ்ரீலங்காவின் பாதுகாப்புப் படை எதிர்கொள்ளும் என்று முப்படைகளின் தளபதி தயா சந்தகிரி, இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, விமானப்படை தளபதி டொனால்ட் பெரேரா மற்றும் பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டே ஆகி யோர் கூட்டாக அறிவித்துள்ளனர்.

கொழும்பு ஊடகவியலாளர்களிடம் பேசிய தயா சந்திகிரி அண்மையில் படையினருக்கு எதிரான தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்ட போதும் மீண்டும் யுத்தம் ஏற்படாது என்றார்.

"யுத்தத்துக்கு நாங்களும் தயார் ஆனால் யுத் தம் நடைபெறக் கூடும் எனத் தெரியவில்லை" என்றும் தயா சந்தகிரி தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் 2 விமானங்களை தம்வ சம் வைத்துள்ளனர் விடுதலைப்புலிகளின் எதுவித அச்சுறுத்தலையும் எதிர்கொள்ள முடியும் என நம்பு கிறோம் என்று விமானப்படை தளபதி டொனால்ட பெரேரா தெரிவித்தார்.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட இரு தாக்கு தல்களால் யுத்தம் ஏற்படாது என்று சிறிலங்கா இரா ணுவத்தளபதிகள் அனைவரும் தெரிவித்துள்ளனர்.

## சரத் பொன்சேகா வங்கிக் கணக்கிலிருந்து 29 இலட்சம் மோசடி

(கொழும்பு)

ஸ்ரீலங்கா இராணுவத்தின் புதிய தளபதியின் பெயரில் இருக்கும் வங்கிக் கணக்கிலிருந்து போலி ஆவணங்கள் பயன்படுத்தி 29 இலட்ச ரூபா பணத்தை மோசடி செய்தாக இராணுவத்தின் சிவில் லிகிதரான தஸநாயக்க முதியன் சலாகே சமன் குமார தஸநாயக்க என்பவர் கைதுசெய்யப் பட்டுள்ளார்.

இராணுவத் தலைமையகத்தின் நிதி இயக் குனரால் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து விசார ணைகளை நடத்திய கொழும்பு விசேட மோசடி விசாரணைப் பிரிவினர் சந்தேக நபரை கைதுசெய் தனர்.

இராணுவத் தலைமையகத்தின் நிதிப் பிரிவில் லிகிதராகக் பணியாற்றிய தஸநாயக்க முதியன் சலாகே சமன் குமார தஸநாயக்க இராணுவத் தளபதியின் பெயருக்குக் கிடைக்கும் பணத்தை வங்கியல் வைப்பீடு செய்யும் கடமைக்குப் பொறுப் பாக இருந்துள்ளார்.

நிதி வைப்பீடு செய்துள்ளதாக அவர் சமர்ப்பித திருந்த ஆவணங்கள் கணக்காய்வின்போது போலி யானவை எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முஸ்லிம்களின் நிலைப்பாடு - யார் குற்றி என்றாலும் அரிசியாகட்டும்

சிறுபான்மை மக்களின் வாக்குகளே இந்நாட்டின் ஆட்சியாளர்களை தீர்மானிக்கின்ற



சக்தியாகும் என்ற உண்மை இம்முறை ஜனாதிபதித்தேர்தலில் மீண்டுமொருமுறை நிரூபணமாகியிருக்கிறது. சிறுபான்மை மக்களின் வாக்குகளை இத்தேர்தலில் நின்ற பிரதான இரு வேட்பாளர்களான மகிந்த ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு பெற்றுக் கொடுக்கும் முயற்சியில் சிறுபான்மைக்கட்சிகள் பகீரதப் பிரயத்தனங்களை மேற்கொண்டிருந்தன. இதற்காக கட்சித்தாவல்கள், குழிபறிப்புக்கள் திரைமறைவு ஒப்பந்தங்கள் என அக்கட்சிகளின் நிகழ்ச்சி நிரல்கள் அமைந்திருந்தன. குறிப்பாக முஸ்லிம் கட்சிகளின் செயற்பாடுகள் பிரசித்தி பெற்றவையாக அமைந்தன.

எது எப்படியோ தேர்தலும் முடிந்து, ஜனாதிபதியும் தெரிவுசெய்யப்பட்டு, புதிய அமைச்சரவையும் நியமிக்கப்பட்டாயிற்று. முஸ்லிம் சமூகத்தின் விமோசனம் விடுதலை, உரிமை என்பனவற்றிற்காகவே அரசியலில் ஈடுபடுகின்றோம் என மேடைக்கு மேடை வீரவசனம் பேசிய முஸ்லிம் கட்சிகளின் கோஷங்களெல்லாம் தற்போது மூலைக்குள் முடங்கும் தருணத்தை அடைந்திருக்கின்றன. முஸ்லிம்களுக்கு கிடைக்கவேண்டிய உரிமைகள், சலுகைகளை பட்டியலிட்ட முஸ்லிம் கட்சிகள் இந்நேரம் அவற்றை குப்பைத் தொட்டிகளில் இட்டிருக்கலாம்.

முஸ்லிம்களின் வாக்குப்பலத்தில் ஜீவித்துக் கொண்டிருக்கும் முஸ்லிம் கட்சிகள், தாங்கள் ஆளுந்தரப்பில் இருந்தாலென்ன எதிரணியில் இருந்தாலென்ன தங்களுக்கு வாக்களித்த மக்களுக்கு சேவகம் புரிவதே அவர்களின் தலையாய கடமையாகும். இக்கடமையை இன்ன இன்ன கட்சிகள் தான் செய்ய வேண்டும் என முஸ்லிம் சமூகம் என்றுமே வரையறை போட்டது கிடையாது. இனியும் அவ்வாறு நடக்க முற்படமாட்டார்கள். மாறாக எந்த முஸ்லிம் கட்சி எந்த சேவையை செய்தாலும் அதனை ஏற்றுக்கொள்ள முஸ்லிம் சமூகம் தயாராகவே இருக்கின்றது. தவிரவும் அதற்காகக் காத்துக்கொண்டும் இருக்கின்றது.

எனவே, தேர்தலில் பிரதான இரு வேட்பாளர்களையும் ஆதரித்த முஸ்லிம் கட்சிகள் தேர்தலுக்கு முன்னர் காணப்பட்டது போலன்றி தமக்கிடையிலான வாய்ச்சாடல்கள், கருத்துமோதல்கள், அறிக்கைச் சமர்கள் போன்றனவற்றை முஸ்லிம் சமூகத்தின் விமோசனம், விடுதலை என்பவனற்றைக்



கருத்திற்கொண்டு முற்றாக தவிர்த்துக் கொள்ள வேண்டும். புதிய அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளை பெற்றிருக்கும் அரசதரப்பு முஸ்லிம் எம்.பிக்களுக்குப் பக்கபலமாக எதிர்த்தரப்பு முஸ்லிம் எம். பிக்கள் நடந்துகொள்ளவேண்டும். அவர்களை நடுச்சந்தியில் விமர்சிப்பதோ, அவர்களது அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு முட்டுக் கட்டையாக இருப்பதோ, அவர்கள் பெற்றிருக்கும் அமைச்சுப் பதவிகளுக்கு எதிராக சதி முயற்சிகளில் ஈடுபடுவதோ எதுவாக இருந்தாலும் அது முஸ்லிம் சமூகத்திற்கான விமோசனத்தையும் விடுதலையையும் ஒரு போதும் பெற்றுத்தராது என்பது மட்டுமன்றி அவற்றைக் குழி தோண்டி புதைக்கவே வழிவகுக்கும் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் மறந்து விடக்கூடாது.

- எஸ். ஏ. எம். பௌஸான்
நீர்கொழும்பு

## அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம்

**உறுப்புரை - 03**

வாழ்வதற்கும் சுதந்திரத்திற்கும் பாதுகாப்பிற்கும் சகலரும் உரிமையுடையோராவர்.

**உறுப்புரை - 04**

எவரும் அடிமையாக வைத்திருக்கப்படுதலோ அல்லது அடிமைப்பட்ட நிலையில் வைத்திருக்கப்படுதலோ ஆகாது. அடிமை நிலையும் அடிமை வியாபாரமும் அவற்றின் எல்லா வகைகளிலும் தடை செய்யப்படுதல் வேண்டும்.

**உறுப்புரை - 05**

எவரும் சித்திரவதைக்கோ அல்லது கொடுமையான, மனிதத்தன்மையற்ற அல்லது இழிவான நடைமுறைக்கோ தண்டனைக்கோ உட்படுத்தப்படுதலாகாது.

(தொடர்ச்சி அடுத்த வாரம்)

## கண்டது.. கேட்டது.. படித்தது..

### அரசியலே சரித்திரம்

ஒரு சமூகத்திலிருந்து மற்றொரு சமூகத்திற்கு மாறுகிற மாற்றம் அவ்வளவு சுலபமானதல்ல. மக்கள் எத்தனையோ இடுக்கண்களையும் கஷ்ட நஷ்டங்களையும் தாண்டித்தான் மாறுதலை காணமுடியும். 'துன்பம் இல்லை, இன்பம் இல்லை' கொடிய போராட்டங்கள் மூலமும் மகத்தான தியாகங்கள் மூலமும் புதிய சமூகம் பிறக்கிறது. மனிதன் முன்னேறுகிறான். ஒவ்வொரு புதிய வளர்ச்சியும் ஒவ்வொரு புதிய முன்னேற்றத்தின் முத்திரையே.

இன்று ஒவ்வொரு ஆணும் ஒவ்வொரு பெண்ணும் நிறைந்த இன்ப வாழ்வு அடைகிற அளவுக்குப் பொருளுற்பத்தி ஏற்பட்டிருக்கிறது. இயற்கை வரட்சி, பஞ்சம், வரையறைக்கப்பட்ட பொருள் வினியோகம், பண்டை முறைப்படி வாழ்தல் ஆகிய நிலைமைகளை பின்தள்ளி விட்டு மனித வர்க்கம் எவ்வளவோ முன்னேறி வந்திருக்கிறது. பண்டைய நிலைமைக்கும் இன்றைய நிலைமைக்கும் ஏணி வைத்தாலும் எட்டாது.

ஆயினும் இன்றும் மனித வாழ்வில் அமைதியில்லை. முறையான வளர்ச்சி இல்லை. சரித்திர சக்திகள் கொலை நெருக்கடியிலேயே உழல்கின்றன. இன்றைய சமூக அமைப்பை மாற்றித்தீர வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு வந்திருக்கின்றன. மனிதன் இருந்த இடத்தில் சும்மா இருக்க மாட்டான். இன்று, அவன் எதிர்நோக்கி நிற்கும் பிரச்சினை என்ன?

செல்வம் மலை மலையாக குவிந்து கிடக்கிறது. எவ்வளவு உற்பத்தி செய்ய யந்திரங்களும் மனிதனிடம் இருக்கின்றன. ஆனால் சொந்தக்காரர்கள் சுயநலமிகளான ஒரு சிலர். ஆகவே இந்த யந்திர சக்தியை பொது உடைமையாக்குவது எப்படி என்பதே இன்றைய பிரச்சினை.

உற்பத்தியை சமூக ரீதியாக்கிவிட்டது முதலாளித்துவம். எப்படி ஏராளமாக எல்லோருக்கும் கிடைக்கத்தக்க அளவு உற்பத்தி செய்வது என்பதில் வெற்றி பெற்றவிட்டது அது ஆனால், உற்பத்தி சாதனங்களும் அதிகாரமும் ஒரு சின்ன சிறிய பங்கீடும் பொது நல நோக்கோடு நடைபெறாமல் சுயநல நோக்கோடு நடை பெறுகிறது.

இந்த மனித அரக்கர்களின் சுயநல சுரண்டல் மொழி தான் தற்காலத்தில் அடிக்கடி நடைபெறும் யுத்தங்களுக்கு காரணம். இரண்டாவது மகா யுத்தத்தைக் கொண்டு வந்தவர்களும், மூன்றாவது மகா யுத்தத்தை கூவி அழைக்கிறவர்களும் இவர்களே.

ப. ஜீவானந்தம் எழுதிய
கம்யூனிஸம் என்ற நூலிலிருந்து.

## வாசகர் கவனத்திற்கு...

கருத்தாடல் களத்திற்கு உங்கள் கருத்துக்களும் வரவேற்கப்படுகின்றன.

அத்தோடு விழிப்பின் பதிவுகள் தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள், விமர்சனங்களையும் நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

எழுதி அனுப்ப வேண்டிய முகவரி.

விழிப்பின் பதிவுகள்
யங் ஏசியா டெலிவிஷன்
இல, 713. டிபி. விஜயசிங்க மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்லை.

மின்னஞ்சல்முகவரி :- villippu@yatv.net

## இருளைவிட

சுடர் எரிகிறது
அணைவது போல

திரி கருகியிருக்கிறது
தீர்ந்திருக்கிறது நெய்

எனினும்
தீராத தாகத்துடனேனும்
தாளாத
சோகத்துடனேனும்
தள்ளாடியபடி இந்த
சுடர் எரிகிறது

இரத்தம் வடியும்
துயர் நிறைந்து

இழப்பில் தொடரும்
இதய வலியுடன

இன்னும் தொடரும்
நம்பிக்கைச்சுடர்
அணைவது போலேனும்
எரிகிறது

இருளைவிட - இந்த
வெளிச்சம்
கொஞ்சமேனும்
உயிர் கொடுக்கிறது

- என். ஜீவேந்திரன்

## மலையக மக்களுக்கு தனியலகு அவசியம்

மலையகத்தமிழர் தம்மை தனியானதோர் தேசிய இனமாகக் கருதுகின்றனர் என்பதும் இதனையொட்டியே மலையக தமிழ் தேசியம் வளர்ந்து வருகிறது என்பதும் மலையக தமிழர் தனியான நிர்வாக அலகை கோருவதற்கான அடிப்படை தகுதியாகக் கொள்ளப்பட வேண்டும்.

மேலும் மலையக மக்கள் நாட்டின் எப்பகுதியில்



வாழ்ந்த போதும் அவர்களது மொழி தமிழ் தான். அவர்கள் தமது தாய் மொழியில் கருமமாற்றக்கூடிய சகல அடிப்படை உரிமை அவர்களுக்குண்டு.

தனித்துவமான கலாச்சார பண்பாட்டு அம்சங்கள் அவர்களுக்கிறது. எனவே அதனை பேணிப்பாதுகாக்கவும் வளர்த்தெடுக்கவும் அவர்களுக்கு உரிமையுண்டு.

தனியான பொருளாதார கட்டமைப்பு அவர்களுக்குண்டு. பெருந்தோட்டப் பொருளாதாரத்தினதும் அதன் உப தொழில்களினதும் சொந்தக்காரர்கள் உண்மையில் மலையகத்தமிழரேயாவர்.

மத்திய மலை நாட்டின் பெரும்பகுதி மலையகத்தமிழரின் வாழ்வாதாரப்பிரதேசமாகும். இன்றைய நிலையில் மலையகத்தமிழர் தாம் பெரும்பான்மையாக வாழ்ந்த நுவரெலியா, கண்டி, மாத்தளை, பதுளை, இரத்தினபுரி, கேகாலை, மொனராகலை மாவட்டங்களில் நுவரெலியாவில் மட்டுமே 52வீதமானோர் வசிக்கின்றனர். ஏனைய மாவட்டங்களில் பூகோளரீதியான மலையகத்தமிழரின் வாழ்வதிகாரப்பிரதேசம் திட்டமிட்ட காணிப் பிரிப்புகளாலும் பெரும்பான்மையினக் குடியேற்றங்களினாலும் சிதைக்கப்பட்டிருந்த போதும் 1984ம் ஆண்டின் நிலைகளில் மலையகத்தின் மேற்குறித்த மாவட்டங்களில் 60க்கு மேல் மலையகத்தமிழர் வாழ்ந்துள்ளனர். கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை மாவட்டங்களில் நிர்வாக உள்ளமைப்புகளை ஏற்படுத்துமளவிற்கு மலையகத்தமிழர் வாழ்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

நாட்டின் பெரும்பான்மை மக்களிடமிருந்து அரசியல் பொருளாதார சமூக கலாச்சார பண்பாட்டு உள்ளார்த்தத்தில் கணிசமான வேறுபாட்டைக்கொண்டிருக்கின்ற மலையகத் தமிழர், இலங்கைத் தமிழர், இஸ்லாமியர் ஆகிய இனக்குடிமங்களில் இருந்து பாரிய வேறுபாட்டைக்கொண்டிருக்கின்றனர் என்பதாலும் மலையகத் தமிழர் தமக்கான தனியார் நிர்வாக அலகை கோர உரித்துடையவர் ஆவார்.

மலையகத்தமிழர் இலங்கையின் ஏனைய இனக்குழுமங்களில் இருந்து மொழி ரீதியான, பிரதேசரீதியான, வர்க்க ரீதியான தமக்கேயுரிய தனித்துவமானதும் சிறப்பு வாய்ந்ததுமான பண்பினைக்கொண்டிருக்கின்றனர். மலையகத் தமிழரின் மொழி மலையகத் தொழிலாளர் வகுப்பின் வாழ்வுச்சூழல், பொருளாதார பின்புலம், சமூக அமைப்புடன் சேர்ந்து தனிச்சிறப்பான ஒரு அமைப்பை தன்னகத்தே கொண்டதாக திகழ்கின்றது.

- நன்றி - விடிவு

இன்னும் சொல்லப்போனால் இரண்டு நூற்றாண்டு கால அடிமைத்தளைகளில் இருந்து அரசியல், பொருளாதார, சமூக, கலாசார, பண்பாட்டு சுரண்டலிலும், தேக்கத்திலும் இருந்து தம்மை விடுவித்து கொள்ளவும் பேரினவாத கருத்தியலின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலில் இருந்தும் அதன் கோர தாண்டவங்களால் அடைந்த சுய கௌவர இழப்புக்களில் இருந்தும் தம்மை மீட்கவும் அடுத்த நூற்றாண்டில் உலகில் மானிட, விஞ்ஞான கைத்தொழில், அபிவிருத்தி வேகத்துடன் ஈடு கொடுத்து முன்னேறலாம். தமது இருப்பையும், உயிர் வாழ்வையும் சகல விதமான கேள்விகளில் இருந்தும் விடுவிக்கவும் மட்டுமல்ல உரிமைகளை நிலை நாட்டவும் மலையக தமிழருக்கு தனியான நிர்வாக அலகு அவசியம் தேவை என்பதில் ஐயப்பட எதுவுமில்லை.

## சகோதர மொழியிலிருந்து சில துளிகள்

இப்போது மட்டுமேன்
இந்த பிளவு

சூரியன் பொதுவானது
சுற்றும் பூமி சகலருக்கும்
பொதுவானது
தாய்மை பொதுவானது

தரணியில் பிறந்த சகலருக்கும்
தாய்ப்பால் கொடுக்கும்
தாய்மை பொதுவானது

மக்கள் மொழிகள்
மண்ணில் ஆயிரமாயினும்
கண்ணீர் பொதுவானது

இருந்தும் நாமிருவரும்
இரு துருவமாய்
இருப்பதேனோ

குழந்தையாய் சேர்ந்திருந்தோம்
இளமையில் இணைந்திருந்தோம்
இப்போது மட்டுமேன்
இந்த பிளவு

மீகமுதுவே லொறேட்டா பீரிஸ்

## இவ்வார விழிப்பில்...

- போர்நிறுத்த உடன்படிக்கை திருத்தப்படவேண்டுமா?
- அக்கரைப்பற்றின் தற்போதைய நிலை
- பெண்களும் உரிமைகளும்
- யாழ் மக்களின் எதிர்பார்ப்பு
- இன்றைய பார்வை




விழிப்பின் பதிவுகள் தொடர்பான மேலதிக விடயங்கள் ரூபவாஹினி 'ஐ'அலைவரிசையில் திங்கள் இரவு **7.30**மணிக்கும். TNL அலைவரிசையில் செவ்வாய் இரவு **7.25** மணிக்கும் ஒளிபரப்பாகும். விழிப்பு நிகழ்ச்சி தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பவேண்டிய முகவரி :- விழிப்பு, யங் ஏசியா டெலிவிஷன், இல 713. டி.பி. விஜயசிங்க மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்லை.தொலைபேசி இல 0112787041-9 தொலைநகல் இல 0112787051 மின்னஞ்சல் முகவரி villippu@yatv.net இணையத்தள முகவரி www.yatv.net

பக்க வடிவமைப்பு (கணனி) - சிற்றம்பலம் கணேசன்

# பிறந்த குழந்தையும் நோய்களும்

(நேற்றைய தொடர்ச்சி)

## பெரிய பிரச்சினை வருமா?

சிக்கன் பொக்ஸ்! நோயினால் குழந்தைகளுக்கும் வயது வந்த வந்தவர்க்கும் பொதுவாக பெரிய பிரச்சினை எதுவும் இருக்காது. உடம்பை சுத்தமாக வைத்துக் கொள்ளாதவர்களுக்கு தோலில் சொறி, சிரங்கு அல்லது படை போல வரக்கூடும். ஒரு சில குழந்தைகளில் வைரஸ் தாக்குதல் தீவிரமாக இருந்தால் நுரையீரலில் பாதிப்பை உண்டு பண்ணி நிமோனியா நோயை ஏற்படுத்தும். இதைத் தொடர்ந்து மூளையில் வீக்கம் மற்றும் தொற்று ஏற்படும். இது மிகவும் ஆபத்தானது. ஆனால் பொதுவாக சிக்கன் பொக்ஸ் நோயின் காலமும் குறிப்பிட்ட காலம்தான். அதனால் ஏற்படும் பிரச்சினைகளும் குறிப்பிட்ட காலம் மட்டுமே காணப்படும்.

## வயது வந்தவர்களுக்கு பாதிப்பு அதிகம்

சிக்கன் பொக்ஸ் குழந்தை பருவத்தில் ஏற்படுத்தும் பாதிப்பை காட்டிலும் வயது வந்தவர்கள் மத்தியில் உண்டு பண்ணும் பாதிப்பு கடுமையாக இருக்கும். வயது வந்தவர்கள் சிக்கன் பொகஸ் வியாதியால் பாதிக்கப்படும்போது கடுமையான காய்ச்சல் இருக்கும். கொப் புளங்கள் வெடித்து தாங்க முடியாத வலி ஏற்படும். பெரும்பாலான வயது வந்தவர்களுக்கு நிமோனியா பிரச்சினை வர வாய்ப்பு உள்ளது. சில சமயங்களில் உயிருக்கும் ஆபத்து நேரிடலாம். கர்ப்பிணிகளுக்கு சிக்கன் பொக்ஸ் போடுவது மிகவும் ஆபத்தானது.

## கர்ப்பிணிகளுக்கு சிக்கன் பொக்ஸ்

கர்ப்பிணிகளுக்கு சிக்கன் பொக்ஸ் பாதிப்பு என்பது எந்த காலத்தில் அவர்களை வைரஸ் கிருமிகள் தொற்றுகிறது என்பதைப் பொறுத்தே அமையும். கர்ப்பம் தரித்த முதல் 3 மாதத்தில் சிக்கன் பொக்ஸ் போட்டால் கருக்கலையும் ஆபத்து இருக்கிறது. அதே சமயம் கர்ப்ப காலத்தில் கடைசி மாதங்களில் சிக்கன் பொக்ஸ் வந்தால் அதைப்பற்றி கவலைப்பட வேண்டியதில்லை. ஏனெனில் பிரசவ காலத்தில் வெளிப்படும் ஆன்டிபயோடிக் பொருட்கள் கருவுக்கு கடத்தப்படுவதால் சிக்கன் பொக்ஸ் நெருங்க முடியாது. ஆனால் பிரசவம் ஆவதற்கு 5 நாட்கள் முன்பாக அல்லது பிரசவம் ஆன 2 நாட்கள் கழித்து சிக்கன் பொக்ஸ போட்டால் ஆன்டி பயோடிக் பொருட்களின் செயலுக்கு கட்டுப்படாமல் வைரஸ் கிருமிகள் நேரடியாக குழந்தைக்கு சென்று விடும். புதிதாக பிறந்த குழந்தைகளுக்கு இப்படி சிக்கன் பொக்ஸ் வருவது மிகவும் ஆபத்தானது. ஏனெனில் இந்த கால கட்டததில் குழந்தை களின் நோய் எதிர்ப்பு மண்டலத்தின் சக்தி கொஞ்சமாக அல்லது பலவீனமாக காணப்படும். இதனால குழந்தைகளுக்கு பெரிய ஆபத்து ஏற்படும்.

## இடுப்பு கரப்பானுக்கும் சிக்கன் பொக்ஸ்சுக்கும் என்ன வித்தியாசம்?

இந்த இரண்டு பிரச்சினைகளுக்குமே வாரிசீலா-சோஸ்டர் என்ற வைரஸ்தான் காரணம். ஆனால் முதலில் வெளிப்படுவது சிக்கன் பொக்ஸ் கொப்புளங்கள் தான். ஒருமுறை சிக்கன் பொக்ஸ் வந்து விட்டால் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி தானாகவே வளர்ந்து விடும் என்பது உண்மைதான். ஆனால் சில சமயங்களில் மேலே கூறிய வைரஸ் கிருமிகள் நரம்புகளின் இடையே உள்ள இடங்களில் ரகசியமாக பதுங்கி இருக்கும். உடலின் நோய் எதிர்ப்புச் சக்தி குறையும் நேரத்தில் அதாவது வயதான காலத்தில் இந்த வைரஸ் கிருமிகள் வேலையை காட்டும். இதன் காரணமாக இடுப்பைச் சுற்றிலும் புண்களுடன் அல்லது கொப்புளங்களுடன் கூடிய தோல் வியாதி ஏற்படும். இதனை இடுப்புக் கரப்பான் என்று அழைக்கிறோம்.

## சிக்கன் பொக்ஸ் நோயைத் தடுப்பது எப்படி?

சிக்கன் பொக்ஸ் வந்தவர்களை தனி இடத்தில் வைக்க வேண்டும். பள்ளி மற்றும் வேலைக்கு அனுப்பக் கூடாது. இதன் மூலம் வைரஸ் கிருமிகள் அடுத்தவருக்கு பரவுவதைத் தடுக்க முடியும். சிக்கன் பொக்ஸ் வைரஸ் கிருமிகள் தாக்காமல் இருக்க ஒரே வழி சிறந்த வழி அம்மை குத்துதல்தான்.

அம்மை குத்துதல் காரணமாக தற்போதைய குழந்தைகளுக்கு இந்நோய் வருவதில்லை. இதுதொடர்பாக உங்கள் மருததுவர்களை சந்தித்து விவரங்களை கேட்டு தெரிந்து கொள்ளுங்கள்.

## கண்பார்வை குறைபாடு

பொதுவாக பிறந்த குழந்தைகள் 6 முதல் 8 வார காலத்துக்குள் தன்னுடைய தாயை அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். அதுபோல குழந்தையின் முன் யாராவது கைகளை ஆட்டி கன்னத்தை தொட்டு வேடிக்கை காட்டினால் குழந்தைகள் அதற்கு ஏற்ப மெலிதான உணாவுகளை வெளிப்படுத்த வேண்டும். ஒரு வேளை குழந்தைக்கு இரண்டு கண்களிலும் பார்வை குறைபாடு இருக்குமானால் அந்தக் குழந்தை தாயை அடையாளம் கண்டுகொள்ள முடியாமல் தவிக்கும். மேலும் அடுத்தவர்களின் வேடிக்கைக்கு ஏற்ப உணர்வுகளை வெளிப்படுத்ததாது. வளர்ந்து நடை பயிலும்போது பொருட்களின் மீது முட்டி மோதி நேரிடும்.

ஆனால் குழந்தைக்கு ஒரே ஒரு கண்ணில் மட்டும் பிரச்சினை இருந்தால் அதை கண்டுபிடிப்பது சற்று சிரமம் தான். ஆனாலும் சில அறிகுறிகள் மூலம கண் பார்வை குறை பாட்டை எளிதாகக் கண்டு பிடிக்க முடியும். குறைபாடு உள்ள கண்ணால் இயல்பான இன்னொரு கண்ணின் அசைவுக்கு ஏற்ற வகையில் இயங்க முடியாது. இதனால் குழந்தை ஒரு கண்ணால் சாய்வாக பார்க்க ஆரம்பிக்கும். இங்குதான் மாறு கண் பிரச்சினை உண்டாகிறது. மேலும் குறை பாடுள்ள கண் படபட வெனக் கண்டபடி துடித்துக் கொண்டே இருக்கும்.

சில நேரங்களில் கண் பப்பாவில் வெள்ளை நிறம் தெரிந்தால் அது குறைபாடுள்ள கண் என்று தெரிந்து கொள்ளலாம். ஒருவேளை கிளாக் கோமா எனப்படும் கண் நீர்அழுத்த நோயால பாதிக்கப்பட்டு இருந்தால் கண்களில் நீர் தேங்கி நிற்கும். இதன் காரணமாக குறிப்பிட்ட கண் மூலம் ஒரு உருவத்தை தெளிவாக காண முடியாது. மங்கலாக தெரியும்.

கடைசியாக கண் பார்வையில் பாதிப பு இருக்கிறது என்பதை மருத்துவப் பரிசோதனை அல்லது கண் பரிசோதனை மூலமாக கண்டுபிடிக்கலாம்.

## கண் பார்வை குறைபாட்டுக்கு காரணங்கள்

ஒரு குழந்தைக்கு கண் பார்வை குறைபாடு வருவதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. அவற்றில் சில-

1. ஒளிவிலகல் குறைபாடு
2. கட்ராக்ட்
3. கிளாக்கோமா
4. மாறுகண்
5. கண்ணில் காயம் ஏற்படுதல் (குழந்தைகள் கண்களில் ஏற்பட்ட காயங் கள் பற்றி பெற்றோரிடம் சொல்லாமல் விட்டு விடுவதால் நாள்போக்கில் பாதிப்பு பெரிதாகும்)
6. கார்னியாவில் நோய்கள்
7. ரெட்டினா மற்றும் பார்வை நரம்பில் பாதிப்பு
8. பரம்பரைக் குறைபாடுகள்
9. கட்டிகள்

மற்றும் கண் பார்வையை பாதிக்கும் இதர காரணங்கள்.

## பார்வை குறை இருந்தால் என்ன செய்ய வேண்டும்?

குழந்தைகளுக்கு ஏற்படும் பார்வை குறைபாடு பிரச்சினைகளில் சிலவற்றை எளிதாக குணப்படுத்தி விடலாம். ஆனால் சில பிரச்சினைகள் சிக்கல் மிகுந்ததாக உயிருக்கே ஆபத்து விளைவிக்கக் கூடிய அபாய நிலையில் காணப்படும். ஆகையால் உங்கள் குழந்தைக்கு பார்வை குறைபாடு இருக்கிறது என்று நீங்கள் சந்தேகித்த அடுத்த விநாடியே ஒரு கண் மருத்துவ நிபுணரிடம் உங்கள் குழந்தையை கொண்டு போய் காட்டுங்கள். உண்மையிலேயே குறைபாடு இருக்குமானால் அவர் கண்டுபிடித்து தகுந்த வைத்தியம் செய்வார். கண்ணை பொறுத்தவரை எவ்வளவு சீக்கிரம் சிகிச்சை அளிக்க முடியுமா? அவ்வளவு சீக்கிரம் சிகிச்சை செய்வதால் கண் பார்வையையும் குழந்தையின் உயிரையும் பாதுகாக்க முடியும். தாமதமான சிகிச்சையால் கண்பார்வை பறி போகும் ஆபத்து உள்ளது என்பதை பெற்றோர்கள் உணர வேண்டியது மிகவும் அவசியம்.

(முற்றும்)

# இராணுவ வன்முறைகளைத் தடுத்து நிறுத்த சர்வதேச தமிழர் கூட்டமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

தமிழர் தாயகத்தில் ஸ்ரீலங்கா ஆக்கிரமிப்பு பகுதிகளில் தொடரும் ஸ்ரீலங்கா இராணுவததின் வன்முறைகளைத் தடுத்து நிறுத்த ஸ்ரீலங்கா அரசாங்கத்திற்கு சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று சர்வதேச தமிழர் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

ஜெனீவாவைத் தலைமையிடமாகக் கொண்டு 150 தமிழ் அமைப்புக்களின் கூட்டமைப்பாக செயற்படும் சர்வதேசத் தமிழர் கூட்டமைப்பு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்படுவதாவது:

அமைதி முயற்சிகளுக்கான முதல் நடவடிக்கையாக யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை ஸ்ரீலங்கா அரசு முழுமையாகச் செயற்படுத்த வேண்டிய தேவை உள்ளது இது விடயத்தில் நோர்வே அனுசரணையாளர்களுக்கு சர்வதேச சமூகம் பக்கபலமாக நிற்க வேண்டும்.

இலங்கையின் வடபகுதியில் அண்மையில் ஏற்பட்ட வன்முறைகளுக்கு காரணம் யாழ்ப்பாணம், நீர்வேலியில் இரு பொதுமக்களை ஸ்ரீலங்கா இராணுவமும அதனுடன் சேர்ந்தியூங்கும் ஆயுதக் குழுவினரும் சுட்டுக்கொன்றதே என்பதை சர்வதேச சமூகம் அறியும் என்று நாம் நம்புகிறோம்.

நீர்வேலிப் படுகொலைகளைத் தொடர்ந்து அமைதி வழிப் போராட்டங்களை நடத்திய மக்கள் மீது ஸ்ரீலங்கா இராணுவமும் அதனுடன் சேர்ந்தியங்கும் குழுவினரும் கொடூரமாக நடவடிக்கைகள் கையாண்டு வருகின்றனர். சட்டம் ஒழுங்கு விடயத்தை காவல்துறையினர்தான் கையாள வேண்டும் ஆனால் இராணுவத்தினரது இந்தச் செயற்பாட்டால் யாழ் குடாநாடு முழுவதிலும் கிளர்ச்சிகளும் கிளைமோர்த் தாக்குதல்களும் இராணுவம் மற்றும் பொதுமக்களின் உயிரிழப்புகளும் ஏற்பட்டுள்ளன.

ஸ்ரீலங்கா இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளில் தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கையை மீள உருவாக்க ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கு சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டுகிறோம்.

தமிழ் முஸ்லிம் உறவைச் சாகுலைப்பதற்காக ஸ்ரீலங்கா அரசாங்கம் மேற்கொண்ட சதித் திட்டத்தை விடுதலைப் புலிகளிடம் சரணடைந்த இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் குழுவைச் சேர்ந்த புகழ்வேந்தனும் ஞானதீபனும் அம்பலப்படுத்தியுள்ளனர். தமிழ் முஸ்லிம் மக்களிடையே நல்லிணக்கத்தையும் அமைதியையும் உருவாக்க தமிழ் முஸ்லிம் தலைவர்கள் மேற்கொண்டு வரும் தொடர் முயற்சிகளை நாம் வரவேற்கிறோம்.

ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் சதிச் செயலை அம்பலப்படுத்தியமைக்க இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் ஆயுதக் குழுவினரால் தமது இரு சகோதரிகளை புகழ்வேந்தன் இழந்துள்ளமை குறித்து நாம் ஆழ்ந்த கவலை கொள்கிறோம். (து)

# அனுசரணையாளராக நோர்வே விடுதலைப்புலிகள் வரவேற்பு

(கிளிநொச்சி)

சமாதான நடவடிக்கைகளில் அனுசரணையாளராக நோர்வே தொடர்ந்து பணியாற்ற உள்ளதை தமிழீழ விடுதலைப் புலிகள் வரவேற்றுள்ளனர்.

கொழும்பு ஊடகமான டெய்லி மிரருக்கு விடுதலைப் புலிகளின் ஊடாக ஒருங்கிணைப்பாளர் தயா மாஸ்ரர் அளித்துள்ள நேர்காணலிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்நேர்காணலில் தயா மாஸ்ரர் மேலும் தொிவித்துள்ளதாவது,

அனுசரணையாளராக நோர்வே செயற்படுதல் குறித்து விடுதலைப் புலிகள் ,தொடக்கம் முதலே தெளிவான நிலைப்பாடுகொண டிருந்தனர். நோர்வே அனுசரணையாளராக தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் உறுதியாக இருந்தோம்.

எம்மைக் கலந்து ஆலோசிக்காமலேயே அரசாங்கம் நோர்வேயை அகற்றும் எநத முயற்சியையும் மேற்கொள்ளக் கூடாது என்றும் தெரிவித்திருந்தோம்.

அரசாங்கத்தின் சில கூட்டணிக் கட்சிகளின் அழுத்தங்கள் இருந்தபோதும் நோர்வேயை அனுசரணையாளராக செயற் பட அரசாங்கம் அழைக்கும் என்று எதிர்பார்த்தோம்.

பல வெளிநாடுகளில் நோர்வே பங்களிப்புச் செய்து வருகிறது இலங்கை அமைதி முயற்சிகளில் அந்நாடு பங்கேற்றபதால் அமைதி முயற்சிகள் வலுவடையும் என்றார் தயா மாஸ்ரர். (ற)

# கிராம அலுவலர்கள் இடமாற்றம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச கிராம அலுவலர்கள் அடுத்த வருடம் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து யாழ்ப்பாணப் பிரதேசத்துக்கு இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறை மத்திய J/49 கிராம அலுவலர் ஜே.பத்திநாதன் தெரிவித்துள்ளார். (ற-72)

# மஹிந்தவின் வரவு-செலவுத் திட்டத்தை ஐக்கிய தேசியக் கட்சி எதிர்க்காது

(கொழும்பு)

ஸ்ரீலங்கா அரச தலைவர் மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றில் தாக்கல் செய்துள்ள வரவு செலவுத் திட்ட அறிக்கையை ஐக்கிய தேசியக் கட்சி எதிர்த்து வாக்களிக்காது என்று அறிவித்துள்ளது.

அக் கட்சியின் நாடாளுமன்ற குழுக் கூட்டத்துக்குப் பின்னர் கடந்த வியாழக் கிழமை வெளியிடப்பட்ட அறிக்கையில் மஹிந்தவின் வரவு செலவுத்திட்ட அறிக்கையில் குறைபாடுகள் இருப்பினும் தமது கட்சிஎதிர்க்காது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேலை வாய்ப்பு உருவாக்கம் வாழ்க்கைச் செலவினத்தைக் குறைத்து வருவாய் அதிகரிப்பு நடவடிக்கைகள் உள்ளிட்டவை இந்த வரவு செலவுத்திட்டத்தில் தெரிவிக்கப்படவில்லை என்றும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் ஸ்ரீலங்கா அரச தலைவர் தேர்தலை எதிர்த்து நீதிமன்றில் வழக்குதொடருவது தொடர்பாகவும் ஐ.தே.க நாடாளுமன்றக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

# முறைப்பாடுகள் அதிகரிப்பு

இலஞ்ச ஊழல் மோசடி தொடர்பாக மக்களிடமிருந்து கிடைக்கும் முறைப் பாடுகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக இலஞ்ச ஊழல் குற்றத்தடுப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் தொடர்பாக மக்கள் நன்கு உணர்ந்துள்ளார்கள் என ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார். ஆணைக் குழுவின் நடவடிக்கைகள் தொடர்பாக மக்களுக்கு அறிவுறுத்தும் திட்டத்தை மேற்கொள்ளவதற்கென அரசாங்கம் வருடத்திற்கு ஒரு மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது. எனினும் இந்தத் தொகை போதுமானதாக இல்லை எனவும் அதனால் கடந்த ஆண்டு நடவடிக்கைகளில் மந்த நிலை ஏற்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (த-9)

நான்கு பேர் அமர்ந்து சீட்டாடுகின்றோம் அவரவருக்கு விழுகிற சீட்டு இருக்கிறதே அது விதி! விழுந்த சீட்டை எப்படி ஆடுகின்றோம் என்பது தான் மதி.

- டாக்டர் ராதாகிருஷ்ணன்

# வலம்புரி

## இராணுவத்தளபதிகள் கண்டபாட்டில் கதை விடலாகாது

ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ பதவி யேற்றதும் இராணுவத்தளபதியாக சரத்பொன்சேகாவை நியமித்துள்ளார்.

இராணுவத்தளபதியாக பதவியேற்ற பொன்சேகா வழமைப்படி எதற்கும் படையினர் தயாராக இருக்கின்றனர் எனக்கூறியிருந்தார்.

புதிய இராணுவத்தளபதியோடு யாழ்ப்பாணத்திற்கான இராணுவத்தளபதிகளிலும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இராணுவத்தளபதிகளை மாற்றம் செய்வது அரசியல் ரீதியிலான பழிவாங்கல் நடவடிக்கைகளுக்கு ஏற்புடையதாக இருக்கலாம்.

ஆனால் , இனப் பிரச்சினைக்கான தீர்வென்பது அதனால் ஏற்பட்டு விடாதென்பதே உண்மை. கடந்த கால வரலாற்றின் நிஜங்களை புரட்டிப் பார்த்தால் இராணுவத்தளபதிகளின் போக்குகளே யுத்தத்திற்கான அடிப்படையாக இருந்துள்ளன.

அதாவது இராணுவத்தளபதிகளாக இருந்தவர்கள் யுத்தத்தை விரும்புபவர்களாக இருந்தனர். யுத்தத்திற்கான அவர்களின் விருப்பமென்பது சுயலாபம் கருதியதாகும்.

ஆயுதக்கொள்வனவு மற்றும் பாதுகாப்பு அனுமதிபோன்றவற்றின் மூலம் நிறைந்த வருமானங்களைப் பெற்றுக்கொண்டனர்.

இதன் காரணமாக யுத்தம் நிறுத்தப்படுவதானால் அவர்களின் ஒத்துழைப்பை இலங்கை அரசுகள் பெறமுடியாமல் இருந்ததை மறப்பதற்கில்லை.

சமாதானப் பேச்சுக்கள் ஒருபுறம் நடந்து கொண்டிருக்கும் போது மறுபுறத்தில் யுத்தம் நடத்தப்படலாமென ஆலோசனை கூறிய இராணு வத்தளபதிகளும் இருக்கவே செய்கின்றனர்.

இவ்வாறு நாட்டில் சமாதானம் ஏற்படுவதை தடுத்த இராணுவத்தளபதிகள் அதற்கான தண்டனைகளை அனுபவிக்கத் தொடங்கி விட்டனர்.

இராணுவத் தளபதிகள் மட்டுமல்ல சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்தபோது பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக இருந்த அநுருத்த ரத்வத்த இனப்பிரச்சினை தீர்வதை ஒருபோதும் விரும்பவில்லை.

சந்திரிகா குமாரதுங்காவின் சமாதான முயற்சிகளை முறியடித்த பெருமையும் அனுருத்வையையேசாரும்.

ஆட்சி பீடத்தை கைப்பற்றிய ஆரம்ப காலங்களில் சந்திரிகா குமாரதுங்காவிடம் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் எண்ணம் இருந்தது.

ஆனால், சந்திரிகாவின் அந்த எண்ணத்தை மாற்றி யுத்தத்தை நடத்த வேண்டுமென்ற ஆலோசனையை முன்வைத்தவர் அனுருத்தவே.

பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் என்ற பதவியையும் ஏற்கனவே இராணுவத்தில் கடமையாற்றிய செல்வாக்கையும் இணைத்து படையினரை தனது பக்கம் வைத்துக்கொண்டு சந்திரிகாவிற்கே அச்சுறுத்தலாக இருந்தவர் அநுருத்த ரத்வத்தை என்பது தெரிந்த உண்மை.

தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்த அனுருத்த அன்று சந்திரிகாவுடன் இணைந்து இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படவேண்டுமென வலியுறுத்தி இருந்தால் இந்த நாட்டில் நிச்சயம் சமாதானம் ஏற்பட்டிருக்கும்.

தனது சுய லாபத்திற்காக மக்களின் உயிருடன் விளையாடிய அனுருத்தவின் கதி இன்று என்ன வாயிற்று. இதைச் சற்று கூர்ந்து கவனிப்பது புதிய இராணுவத்தளபதிகள் தமது கடமையை நேர்மையுடன் செய்வதற்கு உதவுவதாக இருக்கும்.

## கொட்டும் மழை ; பெருக்கெடுக்கும் வெள்ளம் 450 குடும்பங்கள் இடப்பெயர்வு

(யாழ்ப்பாணம்)

ஏற்கனவே பெய்த தொடர் மழை காரணமாக நாவாந்துறை,பொம்மைவெளி, வசந்தபுரம் பகுதிகளில் ஜே.85, 86,87கிராமசேவகர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் தமது சொந்த குடிசைகளை விட்டு வெளியேறி திரும்பவும் அக் குடிசைகளில் வசிக்க ஆரம்பித்த நிலையில்,நேற்றுக் காலை பெய்த பெருமழையினால் அவர்களது குடிசைகளுக்குள் வெள்ளம் புகுந்ததால் அவர்கள் அங்கிருந்து வெளியேறி கொட்டடி நமசிவாய வித்தியாசாலை, பொம்மைவெளி பெண்டிகோஸ் தேவாலயம்,பொம்மைவெளி வைத்தியசாலை முதலியவற்றில் தஞ்சம் புகுந்துள்ளார்கள்.

உடுத்த உடையுடன் வெளியேறியுள்ள தங்களை நேற்று பகல் 2 மணிவரை எந்தவொரு கிராமசேவகரோ, அரச சார்பற்ற நிறுவனமோ வந்து பார்க்கவோ, தங்களுக்கு உணவுப் பொள் எதையும் வழங்கவோ இல்லையென்றும ஊண்,உறக்கமின்றி தவித்துக் கொண்டிருக்கும் தங்களுககு உதவுவார் எவரையும் காணோம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இந்தநிலையிலும், சிலர் தங்கள் உடைமைகளைக் காப்பாற்றும் நோக்குடன் வெள்ளம் சூழ்ந்த குடிசைகளுக்குள் தங்கியிருப்பதையும் அவதானிக்க முடிந்தது.

மழைநீர் கடலில் விழுவதற்காக உதவி வழங்கும் நிறுவனம் ஒன்றினால் கட்டப்பட்ட வடிகாலினூடாக தண்ணீர் வந்து தங்கள் குடிசைகளுக்குள் புகுந்து விட்டதாகவும் அவர்கள் தெரிவித்தார்கள்.நேற்றைய மழை வெள்ளத்தால் கிட்டத்தட்ட 450 குடும்பங்கள் இடம்பெயர்நதுள்ளதாகத் தெரிகிறது.

(து-58)

## பலத்த காற்றுடன் பெருமழை பனூஸ் புயலின் திருவிளையாடல்

(கொழும்பு)

நேற்றுக்காலை யாழ்ப்பாணத்தின் ...கிழக்கு திசையாக 70கிலோ மீற்றர் தூரத்தில் ...மயல் கொண்டிருந்த பனூஸ் என்ற புயல் மேற்கு,வடமேற்குத் திசையாக யாழ்ப்பாணத்திற்கு சற்று வடக்காக மெதுவாக நகர்ந்து செல்வதன் காரணமாக பலத்த காற்றுடன் இடையிடையே கடும் மழை பெய்யும் என வளிமண்டல வியல் திணைக்களம் நேற்று நண்பகல் அறிவித்துள்ளது.

நாட்டின் வடக்குப் பகுதியில் இந்த நிலை காணப்படும்.

அதே சமயம் யாழ்ப்பாணம் ஊடாக மன்னாரில் இருந்து முல்லைத்தீவு வரையான கரையோரப் பிரதேசங்களை சார்ந்த கடற்பிரதேசம் கொந்தளிப்பாக இருக்கும். பலத்த காற்றுடன் மழையும் பெய்யுமென வானிலை அறிக்கை தெவித்தது. இதனால் இந்தப் பிரதேசங்களில வாழும் மீனவர்கள் மற்றும் கப்பல்துறையினர் தங்கள் செயற்பாடுகளை நிறுத்த வேண்டுமென்றும் வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (து)

## மக்கள் துயர் களைவதில் சமுர்த்தி உத்தியோகத்தர் பங்கு

### பாராட்டு விழாவில் ரவிராஜ் எம்.பி

(சாவகச்சேரி)

"எதிர்க்கட்சியிலும், எதிர்கட்சியாகவே நாம் செயற்பட்டுக் கொண்டிருக்கிறோம்" என்று அண்மையில் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் நடந்த சமுர்த்தி வங்கிக்கு கணனிகள் வழங்கியமைக்காக நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜுக்கு அளிக்கப்பட்ட பாராட்டு விழாவில் பேசும்போது அவர் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது,

அரசின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்தே இக் கணனிகளை நான் கொழும்பில் கொள்வனவு செய்து சமுர்த்தி வங்கிக்கு கையளித்துள்ளேன்.

பாமர மக்களின் சேமிப்பை ஊக்குவிப்பதற்குப் பல சிறபபான செயற்பாடுகளுடன் சமுர்த்தி வங்கி இயங்கி வருகிறது. மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு நாம் முகம்கொடுத்து அவற்றைக் களைய வேண்டும். இக் கணனிகளை முறைப்படி பயன்படுத்தி மக்களுக்கான சேவைகளைச் செய்வதே நீங்கள் எனக்குச் செய்யும் உதவியாகும்.

வடக்கில் உள்ள சமுர்த்தி மகா வங்கிகள் மிகவும் பின்தங்கிய நிலையிலே உள்ளன. அந்த நிலை மாற வேண்டும். பாராளுமன்றத்திலே நாம் இப்போது எதிர்க்கட்சியிலும எதிர்க்கட்சியாகச் செயற்படுகிறோம். இந்த நிலையில் வடமாகாணத்தில் சாவகச்சேரி சமுர்த்தி மகாசங்கத்திற்கு இக் கணனிகள் கிடைத்தமை பெருமைக்குரியது. 2000ஆம் ஆண்டு அனர்த்தத்தினால் எமது பகுதிகள் அனைத்தும் பின் தங்கிய நிலையில் இருந்தன. இப்போது நாம் எவ்வளவோ முன்னேறியுள்ளோம். எமது தேசியப்போராட்டத்திலும் எமது அர்ப்பணிப்பு மாறாமல் இருக்க வேண்டும். எமது மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கு நாம் முகம்கொடுக்க வேண்டும்.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்திப்பதன் மூலம் அவர்களின் துயரத்தில் நாமும் பங்குகொள்ள முடியும். சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மக்களைச் சந்தித்து அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து முன் மாதிரியாகச் செயற்படவேண்டும்.

தென்பகுதி சமுர்த்தி வங்கிகள் அச்சு இயந்திரங்களைக் கூட பயன்படுத்தும் வசதியில் இருக்கிறார்கள்.எமக்கு அத்தகைய பொருளாதார வசதி இன்னமும் ஏற்படவில்லை. அதை தட்டிக்கேட்க வேண்டியது எங்களது கடமை. அதற்கு உங்கள் ஒவவொருவரின் ஒத்துழைப்பும் தேவை. (108)

## கொழும்புத்துறைமுக அபிவிருத்தித் திட்டம்

கொழும்புத்துறைமுகம் மேலும் தரப்படுத்தப்படவுள்ளதாக துறைமுகங்கள்,விமானப் போக்குவரத்து அமைச்சின் உதவிச் செயலாளர் ரஞ்சித் சில்வா தெரிவித்துள்ளார்.

இத் தரப்படுத்தல் திட்டத்தின் முக்கிய நோக்கம் மீள் ஏற்றுமதி சேவைகளை விரிவுபடுத்துவதும் பாரிய கப்பல்கள துறைமுகத்தை வந்தடைவதற்கு வசதிகள் செய்து கொடுப்பதுமாகுமென அவர் மேலும் கூறினார்.

இந்த அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவி அளிக்கும்: கொழும்புத்துறைமுகம் வர்த்தக செயற்பாடுகளுக்கு மையமாக விளங்கும் என்றும் அவர் தெரிவித்தார். (து)

## பாடசாலை அதிபர்களுடனான கலந்துரையாடல்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட சகல பாடசாலைகளின் அதிபர்களுக்கான கலந்துரையாடல் கடந்த புதன்கிழமை புதிதாகப் பதவியேற்ற தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அ.வேதநாயகம் தலைமையில் நடைபெற்றது. புதிய கல்விப் பணிப்பாளர் பதவியேற்ற ஏழாவது நாளில் நடைபெற்ற அதிபர்களுக்கான முதலாவது கலந்துரையாடல் இது என்பது குறிப்பிடத்தக்கது.

கைதடி முத்துக்குமாரசாமி ம.வி.அதிபர் முத்துலிங்கம் கலவிப் பணிப்பாளரை வரவேற்று வரவேற்புரை நிகழ்த்தினார்.கல்விப் பணிப்பாளர் தனது உரையில் கல்வி அபிவிருத்திக்கான சகல நடவடிக்கைகளும் வலய மட்டத்தில் இருந்து மாகாண மட்டத்திற்கும், மாகாண மட்டத்தில் இருந்து அமைச்சு மட்டம் வரைக்கும் எடுத்து சென்று சிறப்பாக செயல்படுத்தப் போவதாகவும் ஆரம்ப கல்வித் துறையில் அதிவிசேட கவனம் செலுத்தி, 2006 ஆம் ஆண்டில் ஆரம்பக் கல்வி பயிலும் மாணவர்கள் உச்சப் பயன்பாடு பெறுவதற்கும் நடவடிககை எடுக்கப் போவதாகவும் உறுதியளித்தார்.(து-108)

## பாலியல் பலாத்காரம்

(சாவகச்சேரி)

பெற்றோர் வீட்டிலில்லாத நேரத்தில் தனித்திருந்த 8வயதுச் சிறுமியின் கால் கைகளைக் கட்டி பாலியல பலாத்காரத்துக்குள்ளாக்கிய சம்பவமொன்று கடந்த மாதம் 30ஆம் திகதி மீசாலையில் நடைபெற்றுள்ளது. சம்பவத்தில் ஈடுபட்ட காமுகன் தப்பிச் சென்றுவிட்டான்.

பாதிக்கப்பட்ட சிறுமி யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிகிறது. (து-21)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்



மூட நம்பிக்கைக்கு முழந்தாளிடுவதும் உங்கள் மனதிற்கே உங்களை விற்றுவிடுவதுமாகிய இது எனது ஆன்மாவாகிய உங்களுக்குத் தகாது. நீங்கள் எல்லையற்றவர்கள், மரணமற்றவர்கள், பிறப்பற்றவர்கள். நீங்கள் அளவு கடந்த ஆன்மா. ஆதலால் அடிமையாயிருப்பது உங்களுக்குப் பொருந்தாது. எழுந்திருங்கள், விழித்துக்கொள்ளுங்கள், எழுந்து நின்று போர் புரியுங்கள்.

சுவாமி விவேகானந்தர்

# யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை எதிர்த்த ஜே.வி.பி. தற்போது அதனை ஏற்றுக் கொண்டுள்ளது

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த சில நாட்களில் விடுதலைப் புலிகளின் தாக்குதலினால் 17 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். ஜனாதிபதி தேர்தலின் போது பொய்களால் மக்களை ஏமாற்றி இத்தகைய ஒரு நிலையை நாட்டில் ஏற்படுத்தியமை தொடர்பில் ஜே.வி.பியும் ஜாதிக ஹெலஉறுமயவும் மக்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் வெற்றியின் பின்னர் யுத்தநிறுத்த உடன்படிக்கையை திருத்தி நோர்வேயை விரட்டியடிப்பதாக கூறிய ஜே.வி.பியும் ஜாதிக ஹெல உறுமயவும் இப்போது அந்த உடன்படிக்கையை ஏற்றிருப்பதனால் தாங்கள் பொய் கூறியதற்காக மக்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் என ரணில் தெரிவித்துள்ளார்.

அநுராதபுர மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி செயற்பாட்டாளர்களைச் சந்தித்த போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.நாங்கள் இரகசிய உடன்படிக்கையை கைச்சாத்திட்டுள்ளதாக கூறிய போதிலும் அரசாங்கத்தில் இருக்கும் யாரோ இரகசிய உடன்படிக்கையை கைச்சாத்திட்டுள்ளனர் என்ற கருத்து இன்று மக்கள் மனங்களில் உள்ளது. அழிக்க வேண்டும் எனக் கூறிய உடன்படிக்கையை இன்று நல்லதெனக் கூறி ஜே.வி.பியும் ஜாதிக ஹெல உறுமயவும் இன்று இந்த தேவாலயத்தை வணங்கி வருகின்றனர்.

இராணுவ வீரர்கள் கொல்லப்பட்ட போது இராணுவத்தை முன்னோக்கி அனுப்பப் போவதாக கூறிய அவர்கள், வெள்ளைப்புலிகள் என அவர்களால் வர்ணிக்கப்பட்ட நோர்வே பிரதிநிதிகளை வன்னிக்கு அனுப்பியுள்ளனர் என்றும் விக்கிரமசிங்க மேலும் குறிப்பிட்டார். (ச-8)

# அனைத்துக் கட்சித் தலைவர்களுடன் அடுத்த வருடம் ஜனாதிபதி பேச்சு

புதிய அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளுக்கு முன்னோடியாக மேற்கொள்ளப்படவுள்ள அனைத்துக் கட்சி தலைவர்களுடனான பேச்சு வார்த்தைகளை எதிர்வரும் ஜனவரிமாதம் 2 ஆம் வாரத்தில் இருந்து ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இம் மாநாட்டுக்கு முன்னர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் மற்றும் எதிர்க் கட்சியுடன் தனித்தனியே முதல்சுற்றுப் பேச்சு வார்த்தைகளை நடத்த தீர்மானித்துள்ளார்.ஏற்கனவே ஜாதிக ஹெல உறுமய உட்பட பல கட்சிகளுடன் ஜனாதிபதி இது தொடர்பான பேச்சு வார்த்தைகளை நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

நாட்டின் பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் பேச்சு வார்த்தைக்கு அழைப்பு விடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்விரு கட்சிகளுடனும் மேற்கொள்ளப்பட்ட உத்தியோகப்பற்றற்ற பேச்சு வார்த்தைகளின் போது அவ்விருகட்சிகளும் ஜனாதிபதியின் சமாதான நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதாக தெரிவித்துள்ளன என ஜனாதிபதியின் செயலக வட்டாரங்கள்தெரிவித்தன. (ச-4)

## பனூஸ் சூறாவளியின்...

அடித்து வரப்பட்டு வீதியில் காணப்பட்டன. இதன் காரணமாக வும் வீதி பாரிய அளவில் சேதமடைந்திருப்பதாலும் அப்பாதையூடான போக்குவரத்து நேற்று தடைப்பட்டது.

பொம்மை வெளியில் நிலங்கள் வெள்ளக்காடாக காட்சி அளித்தன. குடிசை வீடுகளினுள் வெள்ளம் புகுந்ததினால் அப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். சுனாமி பாதிப்பிற்குள்ளான இடைத்தங்கல் முகாமில் உள்ள பருத்தித்துறை மக்கள் பல இன்னல்களை அனுபவித்து வருகின்றனர்.

பிறவுண் வீதியில் உள்ள நரிக்குண்டுக் குளம் நிரம்பி வழிவதால் அப்பாதையூடாக செல்பவர்களை அவதானமாகச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதேவேளை குருநகர் இறங்குதுறையில் தரித்து நின்ற 80இற்கும் மேற்பட்ட படகுகள் கடலில் மூழ்கியுள்ளன. நேற்றுக் காலை முதல் மாலை வரை பெய்த மழையினால் 174 மி.மீ. மழை வீழ்ச்சி கிடைத்துள்ளதாக வளிமண்டலவியல்திணைக்களம்தெரிவித்துள்ளது.

இதேவேளை யாழ். குடாநாட்டைதாக்கிய சூறாவளி 50 கிலோ மீற்றர் வேகத்தில் படிப்படியாக நகர்ந்து இந்தியாவை நோக்கிச் சென்று கொண்டிருப்பதாக வளி மண்டலவி இதன் காரணமாக யாழிலிருந்து கற்பிட்டி வரையான கரையோரப்பகுதிகளில்கடல் நீர்புகும் அபாயம் உள்ளதாகவும்வளிமண்டலவியல்திணைக்களம் தெரிவித் துள்ளது. (ச-8)

# மட்டக்களப்பு சிறைச்சாலைக் கைதிகள் கூரையின் மேல் ஏறி உண்ணாவிரதம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சிறைச்சாலையில் உள்ள 10 தமிழ் அரசியல் கைதிகள் சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்றுக் காலை சிறைச்சாலையின் கூரைமீது ஏறி உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர்.

எனினும் நேற்று மாலையுடன் அவர்களின் போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டது.

அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதியில் ஆயுதங்களுடன் நடமாடினார்கள் என்பன உள்ளிட்ட சில குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கடந்த ஆண்டிலும் இவ்வாண்டிலும் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் வைத்து அவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

தங்களை விடுதலை செய்யக் கோரிஅவர்கள்நேற்றுக்காலைஆரம்பித்த போராட்டம் தேசிய மனித உரிமைகள் ஆணைக் குழு வின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் கைதிகளைச் சந்தித்து அளித்த உறுதி மொழிகளை அடுத்து தற்காலிகமாக கைவிடப்பட்டது. (ச-4)

## இதழியல் டிப்ளோமா மாணவர்கள்
# மெழுகுதிரியின் உதவியுடன் நேற்றுப் பரீட்சை எழுதினர்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி மையத்தின் இதழியல் டிப்ளோமா பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் மெழுகுதிரியின் உதவியுடன் பரீட்சை எழுதினர். இச்சம்பவம் நேற்று நடைபெற்றது.

நேற்றுப் பெய்த கடும் மழை மற்றும் சூறாவளிக் காற்றினால் மின்சாரம் தடைப்பட்டுப் போனது. இதனால் பரீட்சை மண்டபத்தை இருள் கௌவிக் கொண்டது.

இதழியல் டிப்ளோமா பரீட்சைக்குத் தோற்றியவர்கள் பரீட்சை எழுதுவதில் கஷ்டத்தை எதிர்நோக்கினர். நிலைமைகளைப் புரிந்து கொண்ட ஊடகவளங்கள்பயிற்சி மையத்தின் (எம்.ஆர்.ரி.சி.) நிர்வாகம் உடனடியாக பரீட்சைக்குத் தோற்றிய இருபது மாணவர்களின்மேசைகளிலும் மெழுகுதிரியை ஏற்றிவைத்தனர்.

கார்த்திகைத் தீபம் போல மெழுகுதிரிகள் எரிய பரீட்சார்த்திகள் தங்கள் பரீட்சையை வெற்றிகரமாக எழுதி முடித்தனர்.

மெழுகுதிரியை ஏற்றி பரீட்சையை தொடர்ந்து எழுதுவதற்கு உதவிய எம்.ஆர்.ரி.சி. பணிப்பாளர் பேராசிரியர் அ.சண்முகதாஸ், இணைப்பாளர் அருட் திரு ரூபன் மரியாம்பிள்ளை, பரீட்சை மேற்பார்வையில் ஈடுபட்ட கலாநிதி மா.வேதநாதன், தமிழ்துறை விரிவுரையாளர் ஈ.குமரன் ஆகியோருக்கு மாணவர்கள் நன்றி தெரிவித்துக் கொண்டனர். (ந)

## ஜே.வி.பி.-ஹெல உறுமய...

திருப்பதாகஅச்செய்தியில் தெரிவித் திருக்கின்றது.

இந்தச் சந்திப்பிற்கு இம் மாத இறுதியில் ஒரு திகதியை நிர்ணயித்துக்கொள்ள முடியு மென்றும் ஜே.வி.பி.மற்றும் ஜாதிக ஹெல உறுமய பிரதிநிதிகள் 15 பேருடன் சர்வ மதத் தலைவர்கள் சிலருக்கு இந்தச் சந்திப்பில் கலந்து கொள்ள முடியுமென தயாமாஸ்டர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளினால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள பொலிஸார் மூவரை விடுவித்துக் கொள்வதற்காக மனு வொன்றை எடுத்துச்சென்ற மதங்களிற்கிடையிலான சமாதான நிதியத்தின் இணைத்தலைவர் பீ.ஆர்.அந்தோனிமுத்து மற்றும் கேகாலை குடாகம புனித மரியாள் தேவாலயத்தின் பிதா வணக்கத்திற்குரிய டட்லி அத்தநாயக்கா ஆகியோருடன் நடைபெற்ற சந்திப்பின்போதே தயாமாஸ்டர் இதனைத் தெரிவித்துள்ளதாக அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-8)

## எம் மீது யுத்தம் திணிக்க...

அவர் இதனைத் தெரிவித்தார். இரு தசாப்த காலமாக நிலவி வரும் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை ஒன்றின் மூலமே நிரந்தரத் தீர்வு காணவேண்டும் என்பதை தாமும் தமிழ் மக்களும் விரும்புவதாக தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

கடந்த கால யுத்த அனர்த்தத்தாலும் கடந்த ஆண்டு ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தாலும் தமிழ்மக்களே பெரும்பாலும் பாதிக்கப்பட்டுள்ளனர். வடக்கு-கிழக்குப் பிரதேசங்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டன.மக்கள்பெரிதும் துன்பத்திற்குள்ளானர்கள்.அவர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குவதை அரசு தொடர்ந்தும் புறக்கணித்து வருகிறது என அவர் மேலும் சுட்டிக் காட்டினார். (ச-4)

## சமாதான பேச்சு வார்த்தை...

புதிய ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள மகிந்த ராஜபக்ஷ சமாதான பேச்சு வார்த்தை சம்பந்தமாக முக்கியமான சமநிலையான நினைத்துப்பார்க்கக்கூடிய யோசனை ஒன்றை தயாரித்துள்ளார் என யப்பானின் விசேட சமாதான தூதுவர் யசூசி அகாஷி தெரிவித்துள்ளார்.

நேற்று அம்பாறை மாவட்டத்துக்கு விஜயம் மேற்கொண்ட அகாஷி ஊடகவியலாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி மகிந்த தயாரித்த யோசனை விரைவில் விடுதலைப் புலிகளிடம் கையளிக்கப்படும் எனவும் அதனைப் பரீட்சித்த பின்னர் விடுதலைப்புலிகள் நல்ல பதிலை அளிப்பார்கள் என தான்எதிர்பார்ப்பதாகவும் கூறினார்.

இவ்விடயத்தில் சர்வதேச சமூகமும் யப்பான் அரசும் எவ்வாறு உதவ முடியும் என்பது குறித்து கவனம் செலுத்தி வருகின்றனர் என அகாஷி தெரிவித்தார். இருப்பினும் யோசனையின் உள்ளடக்கம் பற்றி நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அகாஷி எதனையும் கூறவில்லை.

விடுதலைப்புலிகளை இம்முறை விஜயத்தின் போது ஏன் சந்திக்க வில்லைஎன விளக்கம ளிக்கையில், இம்முறை சந்திக்கவில்லை எனவும் தமக்கென்று பிரத்தியேகமான தொடர்பாடல் முறைகள் உள்ளன என்றும் பதிலளித்தார்.

நேற்று அம்பாறை விஜயத்தின் போது கல்முனையில் இராணுவ அதிகாரிகளையும் முஸ்லிம் மற்றும் தமிழ் பிரதிநிதிகளையும் தனித்தனியாக சந்தித்து தற்போது அங்கு நிலவிவரும் பிரச்சினைகள் குறித்து அகாஷி கேட்டறிந்து கொண்டார். (ச-4)

## மரண அறிவித்தல்



### கார்த்திகேசு துரைராசா
(முன்னாள் Co-op ஊழியர்)

புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு துரைராசா நேற்று மாலை காலமானார். அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு தங்கமுத்து ஆகியோரின் அன்பு மகனும் காலஞ் சென்ற இராமலிங்கம் பொன்னாச்சி ஆகியோரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக் கணவரும் காலஞ் சென்றவர்களான பூதத்தம்பி, தில்லைவனம்,செல்வரத்தினம் மற்றும் நவமணி, அருமைநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் வளர்மதி(சுவிஸ்), வதனசீலன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் செல்வம் (சுவிஸ்), ரூபி(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சோபனா, சுசானா, மிலானி, அகித், அபிதா(சுவிஸ்), ஆகியோரின் அன்பு பேரனும், பசுபதிப்பிள்ளை, இராசமணி, பொன்னுத்துரை, சற்குணம் மற்றும் காலஞ்சென்றவர்களான துரைச்சாமி, பொன்னுத்துரை, ஞானாமிர்தம், மற்றும் பரமேஸ்வரி, விமலாதேவி, ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை (11.12.2005) காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரிகைக்காக பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முஸ்லிம் கல்லூரி வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

தகவல்,
து.நவமணி (சகோதரி)

(201)

மனோகரா யாழ்.
யாழ். நகரில் முதன்முறையாக
DIGITAL dts SOUND ஒலிஅமைப்புடன்
காலை 10.30 இற்கு இளைய தளபதி விஜய், அசின் நடித்த சிவகாசி
1.30, 4.30, 7.30, 10.30 காட்சியாக
இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரேதின வெளியீடாக
சூர்யா, திரிஷா, வடிவேல் நடித்த ஆறு
புதிய காட்சிநேரம்: காலை 10.30, மதியம் 1.30 மாலை 4.30, இரவு 7.30,10.30 (புதியநேரம்)

நிறைஞ்சனாஸ் சங்கானை
விக்ரம், அஸின், வடிவேலு நடித்த மஜா

கா.நே: 11.00,2.45,6.00 (பு.நே)

நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
ஷாம், சினேகா, அபர்ணா நடித்த ஏ பி சி டி

கா.நே:10.30, 1.30,4.30,இரவு7.30 (பு.நே)

EXPOAIR your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 077-2349999,
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.

எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.12.2005 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.